கணிதம்

ஆய்ந்தறி சோதனைகள்

DIAGNOSTIC TESTS

எண்கள்

கணிதத்துறை
விஞ்ஞான, தொழிநுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா

www.lkedu.lk

பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

எமது நாட்டுக் கணிதக் கல்வியினால் எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியாத நிலை தொடர்ந்தும் காணப்படுகின்றது என்பது, கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர), கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சைப் பெறுபேற்றுப் பகுப்பாய்வினால் காட்டப்படுகின்றது. இது நாட்டின் எதிர்கால அபிவிருத்தி மீது பாதகமான வகையில் செல்வாக்கு செலுத்தத்தக்க ஒரு காரணியாகும். இந்த யதார்த்தத்தை இனங்கண்டு அதற்குத் தீர்வு காண்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளைத் தேசிய கல்வி நிறுவக கணித்த துறையினர் மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியதாகும்.

எத்தனைதான் சோதனை வகைகள் பரவலாகக் காட்டப்பட்ட போதிலும், குறைந்த அடைவு மட்டத்தைக் காட்டும் மாணவரை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட சோதனைகள் இலங்கையில் அரிதாகவே காணப்படுகின்றன. மாணவரது கற்றல் பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றைப் பகுப்பாய்வு செய்வதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆய்ந்தறி சோதனைகள் மாணவரது கற்றல் செயன்முறையையும் ஆசிரியரது கற்பித்தற் செயன்முறையையும் விருத்தி செய்வதற்குத் துணையாகும் என்பதில் ஐயமில்லை. தரமான கற்றலுக்கு, இச் சோதனைகள் பெருந்துணையாக அமையும்.

கணித பாட கற்றல்-கற்பித்தல்- மதிப்பீட்டுச் செயன்முறையின் வெற்றிக்காக இந்த ஆய்ந்தறி சோதனைகளைப் பயன்படுத்துமாறு அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் வேண்டுகின்றேன்.

இவ்வாய்ந்தறி சோதனைகள் உங்களது கைகளை வந்தடைவதற்காக அனுசரணை வழங்கிய ஆசிய அபிவிருத்தி வங்கிச் (ADB) செயற்றிட்டத்துக்கும், இக்கருமத்தின் வெற்றிக்காகப் பாடவிடயப் பங்களிப்பு வழங்கிய கணிதத் துறைப் பணியணியினருக்கும் வெளிவாரி வளவாளர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.

பேராசிரியர் டபிள்யு. எம். அபேரத்ன பண்டார
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

www.lkedu.lk

முன்னுரை

கணித பாடத்தின் மூலம் மாணவரிடத்தில் விருத்தி செய்ய எதிர்பார்க்கும் ஆற்றல்களுள் அறிவும் திறன்களும், தொடர்பாடல், தொடர்பு காணல், காரணங்காட்டலும் பிரச்சினை தீர்த்தலும் போன்றவை முக்கியமானவை. எந்த ஒருவரும் தமது பொது வாழ்க்கையில் விருத்தி செய்துகொள்ள வேண்டிய திறன்கள் இவை என்பதை எமது நடைமுறை வாழ்க்கையை நோக்குவதால் அறிந்து கொள்ள முடிகின்றது. இருந்த போதிலும், சில தசாப்தங்களாக கணித பாட அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்காகப் பல்வேறு உத்திகள் கையாளப்பட்ட போதிலும் மாணவரது அடைவு மட்டம் 50 சதவீதத்தை அண்டியதாகவே காணப்படுகின்றமை யைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் காட்டி நிற்கின்றன. மேலும் க.பொ.த உயர்தரத்தில் சேர்ந்து பயிலுவதற்கும் கணிதபாடச் சித்தி இன்றியமையாததாகும்.

மேற்படி விடயங்களை நோக்குகையில், கணித பாடத்தில் மாணவரது அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்காகத் தற்போது பயன்பாட்டில் உள்ள முறைகள், உத்திகள் போதுமானவை யல்ல என்பது தேசிய கல்வி நிறுவக கணிதத் துறையினரின் கணிப்பாகும். இதற்கான ஒரு மாற்றுத் தீர்வாக, ஆய்ந்தறி சோதனைகள் (Diagnostic Tests) குறித்துக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கணித பாடத்தின் சகல எண்ணக்கருக்களையும் விளங்கிக் கொள்வ தற்காக, அவ்வெண்ணக்கருக்களுக்கு இடையிலான கிடை மற்றும் நிலைக்குத்து ஒன்றிணைப்பு பற்றிய தரவு அவசியமாகும். மேலும் ஒவ்வோர் எண்ணக்கருவிலும் எளிமை நிலை தொடக்கம் சிக்கலான நிலை வரையிலான விளக்கமும் அவசியமாகும். எனவே அந்தந்த மாணவன் அந்தந்தக் கணித எண்ணக்கருக்களில் அறிந்து வைத்திருக்கும் மட்டத்தை விளங்கி, அந்நிலையிலிருந்து அவ்வெண்ணக்கருக்களைக் கற்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிப்பது ஒவ்வோர் ஆசிரியரதும் பொறுப்பாகும். எனவே ஆசிரியர் தமது மாணவனின் கணித இயலுமை களையும் இயலாமைகளையும் இனங்கண்டு கொள்ளக்கூடியவாறு அந்தந்த கருப்பொருளின் உள்ளடக்கம் குறிப்பான பல படிமுறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவ்வொவ்வொரு படிமுறை யிலும் மாணவர் பெறவேண்டிய அறிவை இனங்காண்பதற்குப் பொருத்தமான வினாக்கள், மாணவருக்கு பொருத்தமானவாறு தயாரிக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் தமது மாணவனின் கணித இயலுமைகளையும் இயலாமைகளையும் அந்தந்த மாணவனின் அறிவு மட்டத்தையும் இனங்கண்டு கொள்வதற்கு இவை பெரிதும் துணையாகும்.

ஆசிரியர் இச்சோதனைகள் அதாவது கருவிகள் பற்றிய விளக்கத்தைப் பெற்று தமது மாணவருக்குப் பொருத்தமான வினாத்தொகுதிகளை வழங்குவதன் மூலம் தமது கருமங் களையும் மாணவரது கருமங்களையும் இலகுபடுத்திக் கொள்ளலாம்.

இக்கருவிகளின், நடைமுறைச் சாத்தியம், தகுதி (Validity) ஆகியவற்றை இனங்காண்பதற்காக கையாண்டுபார்க்கப்பட்டது. மாணவரது கணித அறிவைப் படிப்படியாக வளர்ப்பதற்கு இக்கருவிகள் துணையாகும். இந்தப் பணிக்காகப் பங்களிப்புச் செய்த, தேசிய கல்வி நிறுவகச் செயற்றிட்டக் குழுவுக்கும், வெளிவாரியாகப் வளப்பங்களிபுச் செய்தோருக்கும் கையாண்டு பார்த்தலில் பங்களிப்புச் செய்தோருக்கும் ஏனைய பணிகளில் பங்களிப்புச் செய்தோருக்கும் எமது நன்றி உரித்தாகும்.

கே. ஆர். பத்மசிறி
பணிப்பாளர்
கணிதத்துறை
தேசிய கல்வி நிறுவகம்.

www.lkedu.lk

அறிமுகம்

கணிதம் எண்ணக்கருக்கள் சார்ந்த கருத்துநிலையான ஒரு பாடமாகும் என்பது கல்வியிய லாளரின் அபிப்பிராயமாகும். கணிதம் கற்கும் போது கணித எண்ணக்கருக்கள், படிப்படியாகவும் ஒழுங்குமுறையாகவும் கட்டியெழுப்பப்படும். முதன்மையான எண்ணக்கருக்கள் சரியாகச் கிரகிக்கப்படாதவிடத்து பிற்காலத்தில் துணை எண்ணக் கருக்களைக் கிரகிப்பதில் இடர்ப்பாடுகள் தோன்றும். அதன் விளைவாக விடய அடைவில் குறையேற்படும். அடைவுக் குறைபாடு காரணமாக, கல்வி மீதான ஆர்வம் குறைவடைவதால் மாணவர் கற்றலினின்று நீங்க முனைவர். கூடவே கணிதம் குறித்து ஒருவித அச்சத்தையும் ஏற்படுத்திக் கொள்வர். இந்நிலை எமது நாட்டுப் பிள்ளைகளின் கல்வியுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளது எனலாம்.

ஆய்ந்தறி சோதனை என்பதால் கருதப்படுவது யாது?

மாணவரிடத்தில் காணப்படும் சிற்சில நலிவுகளையும் வலிவுகளையும் இனங்காணும் நோக்குடன் நடத்தப்படும் சோதனைகள் ஆய்ந்தறி சோதனைகள் எனப்படுகின்றன. கற்பித்தல் வேலைத் திட்டத்தின் தொடக்கத்திலேயே அடிப்படைத் திறன்களில் மாணவர் காட்டும் குறைபாடுகளை இனங்கண்டு கொள்வது அவசியமாகும். இவ்வாறான குறைபாடுகளை இனங்காண்பதற்காகவே ஆய்ந்தறி சோதனைகள் தயாரிக்கப்படும். யாதேனும் குறிப்பான கற்கைப் பரப்பு அல்லது பாடவிடயம் சார்பாக மாணவன் வெளிக்காட்டும் குறிப்பான குறைபாடுகளையும் திறமை களையும் கண்டறிவதற்காகவும் ஆய்ந்தறி சோதனைகள் தயாரிக்கப்படும். எந்தவொரு கற்பித்தற் செயன்முறையினதும் வினைதிறன்மிக்க போதனா வழிகாட்டலினதும் அடிப்படையாக அமைவது ஆய்ந்தறிகையாகும்.

ஆசிரியரது வகிபாகம், மாணவரிடையே பண்புத்தரமிக்க கற்றற் செயன்முறையை உருவாக்குவ தாகும். மாணவர் செயல் ரீதியில் கற்றற் செயன்முறையில் ஈடுபடுவாராயின் மாத்திரமே இது சாத்தியமாகும். தமது கற்றல் - கற்பித்தற் செயன்முறையின் போது கற்றலில் விடும் தவறுகளை இனங்கண்டுகொள்வது அவசியமாகும். இப்படிமுறையின் போது ஆசிரியரது கருமம் ஒரு வைத்தியனின் கருமத்தை ஒத்ததாகும். வைத்தியர் தமது நோயாளியின் நோயை இனங்காண்பதற்காக பல்வேறு சோதனைகளை நடத்தி நோயைக் கண்டறிந்து அந்நோய்க்குரிய பரிகாரத்தைச் செய்வார். கல்வித் துறையில் நடத்தப்படும் ஆய்ந்தறி சோதனைகளும், நோயைக் கண்டு பிடிப்பதற்காக வைத்தியர் நடத்தும் சோதனைகளுக்கு ஒப்பான நடத்தையையே காட்டும்.

ஆய்ந்தறிந்தவற்றை வகுப்பறையில் எவ்வாறு பயன்படுத்தலாம்?

குறித்த பாடப்பரப்பை அல்லது அலகைப் பூர்த்தி செய்த பின்னர் ஒரு சோதனையினால் மாணவரது அடைவு மட்டம் கணிப்பீடு செய்யப்படும். இம்மதிப்பீட்டின் மூலம் மாணவர் தொடர்பான சில முடிவுகளைக் காட்டுவர். மற்றும் சில மாணவர்கள் எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்தை அடையவில்லை என்பன உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இனி இவ்வாறாக எதிர்பார்க்கப்பட்ட அடைவு அடையாத அதாவது மெல்லக் கற்கும் மாணவர்கள், அந்நிலையில் காணப்படுவதற்காக காரணங்கள் எவை என்பதைத் தேடியறிதல் வேண்டும். இந்நிலைமைக்கான காரணங்கள் பல இருக்க இடமுண்டு. குறிப்பாக தவறுவிட்டுள்ள கடினமான பாடப்பரப்புக்கள் எண்ணக்கருக்கள் எவை என்பதை தேடியறிவது அவசியமாகும். இவ்வாறாக கற்றலில் இடர்ப்பாடுகள் காணப்படும் விடயப்பரப்புக்களை இனங்கண்டு, அதற்கான காரணங்களைத் தீர்மானிப்பதற்காக ஆய்ந்தறி சோதனைகளைப் பயன்படுத்த வேண்டும்.

www.lkedu.lk

கற்றலில் இடர்ப்பாடுகளைக் காட்டும் விடயப்பரப்புக்களை இனங்கண்ட பின்னர் மாணவர் நன்கு துலங்கல் காட்டாமைக்கான காரணங்களைத் தேடியறிதல் வேண்டும். இங்கு ஆசிரியரது பணி நோயாளியினது நோயைக் கண்டு பிடிப்பதற்காகச் சோதனைகளை நடத்தும் வைத்திய னின் பணிக்கு ஒப்பானது. கல்விச் செயன்முறையின் போது மாணவரது மேற்படி நிலைமையைத் தேடியறிவதற்காகக் கையாளப்படும் வழியே ஆய்ந்தறி சோதனை எனப்படுகின்றது.

ஆய்ந்தறி சோதனையின்போது பின்வரும் படிமுறைகள் குறித்துக் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

i உதவி தேவைப்படும் மாணவர்கள் யாவர்?
ii மாணவர் தவறுவிடும் பாடப்பரப்புகள் / எண்ணக்கருக்கள் யாவை?
iii அத்தவறுகள் ஏற்பட்டுள்ளமைக்கான காரணங்கள் யாவை?

மேற்படி விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கணித பாடத்துக்காக ஐந்து ஆய்ந்தறி சோதனைத் தொகுதிகள் தேசிய கல்வி நிறுவக கணிதத் துறையினரால் தயாரிக்கப்பட்டன. குறைந்த அடைவுமட்டத்தைக் காட்டுபவையான கற்றல் இடர்பாடுகளுள்ள பாடப்பரப்புக்களை இனங்கண்டுள்ளனர். அக்கற்றல் இடர்ப்பாடுகளுக்கான காரணங்களைத் தேடியறிவதற்காக ஆய்ந்தறி சோதனைகளைப் பயன்படுத்தலாம். இவ்வொவ்வோர் ஆய்ந்தறி சோதனையும் ஏறத்தாழ 40 நிமிடங்களில் பூர்த்தி செய்யத்தக்கதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆய்ந்தறி சோதனைகளைத் தயாரிப்பதற்காகக் கையாளப்பட்ட படிமுறைகள்:

1. பிரதான அலகை, குறிப்பான சிறுசிறு உப அலகுகளாக வகுத்தல்.
2. குறிப்பான வினாத்தொடரொன்றினைப் பட்டியற்படுத்தல் அவ்வொவ்வொரு வினாவையும் குறித்த ஒவ்வொரு விடயத்தினை மாத்திரம் சோதிப்பதற்காகத் தயாரித்தல்.
3. அவ்வொவ்வொரு விடயத்துக்கும் ஒரே வகையைச் சேர்ந்த மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வினாக்கள் முன்வைத்தல்.

ஆய்ந்தறி சோதனைனகளின் தகுதியை (Validity) உயரிய மட்டத்தில் பேணுவதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆய்ந்தறி சோதனைகளின் உள்ளடக்கம்

ஒவ்வொரு தலைப்பின் கீழும், ஆய்ந்தறி சோதனைகளில் பின்வரும் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்கப்பட்டள்ளன.

1. **விடயப்பகுப்பாய்வு.**
   பிரதான அலகு, உப அலகுகள், சிறப்புக் குறிக்கோள்கள், அந்தந்தக் குறிக்கோளுக் குரிய வினா இலக்கம் ஆகியன உள்ளடக்கப்பட்டிருத்தல்.
2. **ஆய்ந்தறி சோதனை வினாப்பத்திரம்**
   ஒவ்வொரு வினாப்பத்திரமும் 40 நிமிட நேரத்தில் செய்து முடிக்கத்தக்கவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.
3. **விடைகளும் அறிவுறுத்தல்களும்.**
   மாணவர்கள் விடையளிக்கும் போது அவ்விடைகளில் உள்ளடங்க வேண்டிய விடயங்களும் அவற்றின் மட்டங்களும் அறிவுறுத்தல்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

www.lkedu.lk

இந்நூலின் பொருளடக்கம்

இந்நூலில், எண்கள் என்னும் கருப்பொருளின் கீழ் தயாரிக்கப்பட்ட ஆய்ந்தறி சோதனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அடிப்படைக் கணிதச் செய்கைகளின் கீழ் தயாரிக்கப்பட்ட நான்கு சோதனைகளும், எண்கோலங்களில் கீழ் தயாரிக்கப்பட்ட ஒரு சோதனையும், பின்னங்கள் எனும் தலைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட மூன்று சோதனைகளும், தசமங்களின் கீழ் தயாரிக்கப்பட்ட மூன்று சோதனைகளும், விகிதத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட இரண்டு சோதனைகளும், சதவீதத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட மூன்று சோதனைகளும், வர்க்க மூலத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட ஒரு சோதனையும் இதில் அடங்கியுள்ளன. அவற்றை பின்வருமாறு காட்டலாம்.

1. அடிப்படை கணிதச் செய்கை I, II , III , IV
2. எண்கோலங்கள்
3. பின்னங்கள் I , II , III
4. தசமங்கள் I , II , III
5. விகிதங்கள் I , II
6. சதவீதம் I , II , III
7. வர்க்கமூலம்

கணிதத்திறன் மதிப்பீட்டின்போது கவனத்திற் கொள்ள வேண்டிய காரணிகள்:

1. செம்மை
2. துலங்கல் வேகம்
3. விருத்தி மட்டம்
4. பண்புத்தரம்
5. அனுபவப்பரப்பு (திறன் வீச்சு)
6. சிந்தனை முறையும் ஆற்றுகையும்

தரப்பட்டுள்ள ஆய்ந்தறி சோதனைகளைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள்:

1. ஆய்ந்தறி சோதனை வழங்குவதற்குரிய மாணவர்களை இனங்காண்க.
2. அவர்கள் கற்றலில் இடர்ப்பாட்டைக் காட்டும் விடயப்பரப்பை / பரப்புக்களை இனங்காண்க.
3. ஆய்ந்தறி சோதனையை நடாத்துவதற்குப் பொருத்தமான ஒரு நேரத்தை தெரிவு செய்து கொள்க.
4. ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் முதலாவது வினாவில் ஆரம்பித்து படிப்படியாக விடையளித்துச் செல்லுமாறு மாணவருக்கு அறிவறுத்துக.
5. இச்சோதனையின் முக்கியத்துவத்தை மாணவர் விளங்கிக் கொள்ள வகைசெய்க. அதற்கமைய விடையளிக்கும் போது கலந்துரையாடுவதையும், ஏனையோரின் விடைகளைப் பார்த்து எழுதுவதையும் தவிர்த்துக் கொள்வதன் அவசியத்தையும் உணர்த்துக.
6. ஒரு வினாப்பத்திரத்திற்கு ஏறத்தாழ 40 நிமிட நேரம் செலவாகுமென எதிர்பார்க்கப் படுகின்றது.
7. மாணவரது விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் போது, விடைப்பத்திரத்துடன் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுக.

www.lkedu.lk

8. யாதேனும் வினா இலக்கத்தின் கீழ்க் கோவைப்படுத்தப்படுத்தப்பட்டுள்ள எல்லா உருப்படிகளுக்கும் சரியாக விடையளித்துள்ளாராயின் மாத்திரம், அப்பாட விடயத்தில் பாண்டித்தியம் பெற்றுள்ளார் எனக் கருதுக. வினாப்பத்திரத்தில் உள்ள மூன்று வினாக்களுள் ஒரு வினாவுக்கு மாத்திரமே சரியாக விடையளித்துள்ளாரெனின் அதனை ஓர் எழுமாறான நிகழ்வு எனக் கருதுக.

9. விடைகளை மதிப்பீடு செய்யும் போது மேலே கணிதத் திறன் மதிப்பீட்டின் போது கவனத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் எனும் தலைப்பின் கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் குறித்துச் கவனஞ் செலுத்துக. (செம்மை, துலங்கல் வேகம், விருத்தி மட்டம், பண்புத்தரம், அனுபவப்பரப்பு, சிந்தனை முறையும் அடைவும்)


10. ஆய்ந்தறி சோதனை மூலம் கற்றல் இடர்ப்பாட்டுக்கு ஏதுவாகிய காரணங்களை இனங்கண்டு பொருத்தமான பரிகார வேலைத்திட்டங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துக.

பரிகார வேலைகளைத் திட்டமிடும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய காரணிகள்:

i. விடைத்தாள்களை மதிப்பீடு செய்து, புள்ளிகளைப் பகுப்பாய்வு செய்து மாணவனின் கற்றல் இடர்ப்பாடுகளுக்கு ஏதுவாகியுள்ள விடயங்களைக் குறிப்பாக இனங்கண்டு கொள்க. அவ்விடயங்கள் குறித்து மாணவர்களுடன் நேர்காணல் நடத்தி அவ்விடயங்களை ஆழமாகக் கற்றாய்ந்து இயன்ற அளவுக்கு தனித்தனி மாணவருடன் கலந்துரையாடலை நடத்துக.
ii. மெல்ல மெல்லக் கற்பதற்குக் காரணமாக அமைந்த பிற காரணிகளைத் தேடியாய்க. போதுமான அளவு பழக்கம் / பயிற்சி பெறாமை, பாடசாலைக்கு வருகை தராமை, சுகவீனமும் சுகாதார நிலையும், தவறான பழக்கங்கள் போன்றவை குறித்துக் கவனஞ் செலுத்துக.
iii. மாணவரது விடைகளின் செம்மை , தரம் ஆகியன குறித்துக் கவனஞ் செலுத்தி அவை தொடர்பாக அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.
iv. மெல்ல மெல்லக் கற்கும் மாணவரது கற்றல் வேகத்தை அதிகரிப்பதற்காக, அவர்களை மீண்டும் மீண்டும் பயிற்சிகளில் ஈடுபடச் செய்க.
v. பரிகார வேலைகளைத் திட்டமிடும் போது விரிவுரைமுறையை இயன்ற அளவுக்குத் தவிர்த்துக்கொள்க. குழுச்செயற்பாடுகள், களிப்பூட்டும் விளையாட்டுக்கள் போன்றவற்றை இயன்ற அளவுக்குத் திட்டமிட்டு கற்றல் செயன்முறையை நடைமுறைப்படுத்துக.
vi. மாணவர்களுக்கிடையே விளைதிறனான கலந்துரையாடல்களும் இடைத்தொழிற்பாடு களும் நிகழும் வகையில் கற்றல்-கற்பித்தல் செயன்முறையைத் திட்டமிடுக.
vii. கருத்து நிலையான எண்ணக்கருக்களை இயன்ற அளவுக்கு உண்மைப்பொருள் சார்ந்த அனுபவங்கள் மூலம் உறுதிப்படுத்துக.
viii. பரிகாரக் கற்றற் செயன்முறைக்காக சரியான, பொருத்தமான கற்றற் சாதனங்களைப் பயன்படுத்துக.
ix. மாணவரது முன்னேற்றம் தொடர்பாக ஒழுங்குமுறையாகப் பதிவுகளைப் பேணுக.
x. மாணவரது கற்றல் இடரப்பாடுகளைத் தவிர்த்து அவர்களை பாடத்திட்டத்தின் குறித்த பாடவிடயங்களின் பால் வழிப்படுத்துக.

www.lkedu.lk

ஆய்ந்தறிகை மூலம் மேம்பட்ட தரமான கற்றலைக் காட்டும் ஒழுங்கு முறை:



மேற்படி ஒழுங்குமுறையின்படி மாணவர் தவறுவிடும் மற்றும் இடர்ப்பாட்டைக் காட்டும் பாடப்பரப்புக்களுக்கான ஆய்ந்தறி சோதனைகளைக் கட்டியெழுப்பி, மாணவரது திறன்களைப் பகுப்பாய்வு செய்யலாம். நாம் சோதனைகள் தயாரித்துள்ள பாடப்பரப்புக்களுக்கு மேலதிகமாக, ஏனைய பாடப்பரப்புகளிலும் ஆய்ந்தறி சோதனைகளைத் தயாரிக்க முயற்சி செய்க. தாம் தயாரித்து முன்வைத்துள்ள ஆய்ந்தறி சோதனைகள் தொடர்பான ஆக்கபூர்வமான பிரேரணை களையும் கருத்துக்களையும் எமக்கு அறிவிப்பீர்களாயின் நன்றியுடையவர்களாவோம்.

கணிதத்தில் சித்திபெறத் தவறி, உயர் கல்வி வாய்ப்பை இழக்கும் அவல நிலையை எதிர்நோக்கும் பல்லாயிரக்கணக்கான இலங்கைப் பிள்ளைகளை இலக்காகக் கொண்டே இந்த ஆய்ந்தறிகைச் சோதனைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நம் நாட்டுப் பிள்ளைச் செல்வங்களின் அறிவுக் கண்களைத் திறக்கலாம் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

[பொதுவான மதிப்பீட்டின் போது மாணவரது அடைவு கணிப்பீடு (assess) செய்யப்படுவதோடு ஆய்ந்தறிகை சோதனையின் போது மாணவரது திறன்கள் பகுப்பாய்வு (analysis) செய்யப்படும்.]

கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப் பெறுபேறு
மேம்பாட்டுச் செயற்றிட்டத் தலைவர்.

www.lkedu.lk

பரிகாரக் கற்பித்தல்

வகுப்பறையில் உள்ள மாணவர்களைக் கருதுகையில், அவர்களுள் பெரும்பாலானோர் கற்றல் இடரப்பாடுகளைக் கொண்டுள்ளமையை அறியமுடிகின்றது. நினைவாற்றல் குறைவு, கற்றலின்பால் ஊக்கம் பெறுவதிலுள்ள குறைபாடுகள், கற்றலில் கவனஞ் செலுத்துதல் சார்ந்த குறைபாடுகள், பிரச்சினை தீர்த்தற் குறைபாடுகள், வெவ்வேறு எண்ணக்கருக்களைக் கிரகிப்பதிலுள்ள குறைபாடுகள், கற்ற அறிவை உரிய சந்தர்பங்களில் சரியாகப் பயன்படுத்து வதிலுள்ள குறைபாடுகள் போன்றவை மாணவர்கள் காட்டும் அவ்வாறான சில இடர்ப்பாடு களாகும்.

மாணவர்களிடத்தில் பலவகைப்பட்ட கற்றல் இடர்ப்பாடுகள் காணப்படுவதோடு, பல்வேறு திறன்களும், வெவ்வேறு கற்றல் முறைகளும் அவர்களது வசமுள்ளன. சில பிள்ளைகள் கட்புல ஊடகத்தைப் பயன்படுத்திக் கற்பதில் திறமைகாட்டுவர்; மற்றும் சில செவிப்புல ஊடகத்தைப் பயன்படுத்திக் கற்பதில் ஆர்வம் காட்டுவர்; மற்றும் சில மாணவர்கள் செயன்முறை அனுபவங்கள் மூலம் கற்பதையே பெரிதும் விரும்புவர்.

அதற்கமைய மாணவரிடத்தே காணப்படும் திறன்கள் மற்றும் கற்றல் முறைகளில் கவனஞ் செலுத்தி சிலரிடத்தே காணப்படும் கற்றல் இடர்ப்பாடுகளை இழிவாக்குவதை நோக்காகக் கொண்டு அவர்களிடத்தே கற்றல் சூழலில் அவர்களுக்குப் பொருத்தமான கற்றல் - கற்பித்தற் சாதனங்களைப் பயன்படுத்தி அவர்களது கற்றலின் தரத்தை மேம்படுத்துவதே பரிகாரக் கற்பித்தல் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும். ஆய்ந்தறி சோதனை மூலம் பெறும் தகவல்களே பரிகாரக் கற்றல்-கற்பித்தலின் தொடக்கப் புள்ளியாகும்.

மாணவரது கற்றல் இடர்ப்பாடுகளை இழிவாக்கும் நோக்குடன் செய்யப்படும் பரிகாரக் கற்பித்தலின் போது கவனத்திற் கொள்ள வேண்டிய பல விடயங்கள் உள்ளன. ஆசிரியரது ஆயத்தம், வெவ்வேறு கற்றற் செயற்பாடுகளைப் பயன்படுத்தல், பொருத்தமான கற்றல் சந்தர்ப்பங்களை ஒழுங்கு செய்தல், வெவ்வேறு கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துதல், தகவல்களைத் தெளிவாக வழங்குதல், பிரதான விடயங்களைப் பொழிப்பாக்கி முன்வைத்தல், கற்றலின் பால் விருப்பத்தையும் ஆர்வத்தையும் மேம்படுத்துதல், வகுப்பறைச் செயற்பாடுகளின் போது மாணவரது ஈடுபாட்டை அதிகரித்தல், கற்றற் செயன்முறையின் பால் கூடுதலான கவனம் செலுத்துதல், அந்தந்த மாணவரின் திறன்களைக் கருத்திற் கொள்ளல் போன்றவை அவற்றுள் அடங்கும்.

இவ்விடயங்களை விரிவாக நோக்குவோம்.

ஆசிரியரது ஆயத்தம்

பரிகாரக் கற்பித்தலை நடத்தும் ஆசிரியர் தனது பாடத்தைத் தயாரிக்க முன்னர், மாணவரது கற்றல் இடர்ப்பாடுகளை இயன்றளவு விரைவாக இனங்கண்டு கொள்வது அவசியமாகும். அதற்காக ஆய்ந்தறி சோதனையொன்றினை நடத்தலாம். அதற்கமைய தமது மாணவருக்கு மிகப் பொருத்தமானவாறு கற்பித்தல் திட்டமொன்றினைத் தயாரித்துக் கொள்ளலாம் அல்லது கற்ற, பிரதான விடயங்களை வாய்மொழி மூலம் அல்லது எழுத்து மூலம் வகுப்பறையில் முன்வைக்குமாறு மாணவரை வழிப்படுத்தலாம். அது மாணவரது ஞாபகத்தை உறுதிப்படுத்தத் துணையாகும்.

www.lkedu.lk

கற்றலில் விருப்பத்தையும் ஆர்வத்தையும் மேம்படுத்தல்.

வகுப்பறைக் கற்றற் சந்தர்ப்பங்களின் போது கற்றல் இடர்ப்பாடுகள் காரணமாக, கற்றல் தொடர்பாக அவர்கள் காட்டும் ஆர்வமும், விருப்பமும் படிப்படியாகக் குறைவடையும் எனவே கலைத்திட்டத்தை மாணவரது தேவைகளுடன் தொடர்புபடுத்திக் கொள்வதில் ஆசிரியர் கவனஞ் செலுத்துதல் வேண்டும். மாணவரது விருப்பத்தையும் கருத்திற்கொண்டு சுவாரசியமான செயற்பாடுகளையும் ஆசிரியர் திட்டமிட்டுக் கொள்வது பயன்மிக்கதாகும்.

வகுப்பறைச் செயற்பாடுகளின் போது மாணவரது ஈடுபாட்டை அதிகரித்தல்.

கற்றல் இடர்ப்பாடுடைய பிள்ளைகள் பெரும்பாலும் சுயகற்றலில் ஈடுபடுவதில் ஆர்வம் குறைந்தவராகவும் ஓரளவுக்கு அமைதி விரும்பிகளாகவும் இருப்பர். அவர்கள் வினாக்கேட்பதில் அவர்களது கருத்துக்களை முன்வைப்பதிலும் பின்னிப்பர். எனவே அவர்களது செயல்ரீதியான ஈடுபாட்டைப் பெறுவதற்காக ஆசிரியர் அவர்களைத் தூண்டித் தைரியமூட்டுவது அவசியமாகும்.

கற்றல் - கற்பித்தற் செயன்முறையின்பால் கூடுதலாக கவனம் செலுத்துதல்.

கற்பித்தலின் போது அறிவைக் கடத்துதல் தொடர்பாக மாத்திரம் கவனஞ் செலுத்துவது போதுமானதல்ல. கற்றற் செயன்முறையின் போது மாணவருக்குப் பயன்தரத்தக்க செயல்கள் இடம்பெறுகின்றனவா என்பது குறித்துக் கவனஞ் செலுத்துதல் வேண்டும். மேலும் தாம் கற்றவை தொடர்பாகச் சிந்திப்பதற்கும் செயல்ரீதியில் கையாண்டு பார்ப்பதற்கும் பிரச்சினை தீர்ப்பதற்கும் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். மேலும் ஆசிரியர் அச்சந்தர்ப்பங்களைக் கவனமாக அவதானித்து அவர்களது திறன்களுக்கு அமைய தேவையான உதவிகளைச் செய்து பின்னூட்டல் வழங்குதல் வேண்டும். மேலும் அவர்களுக்கு தைரியமூட்டு வதும் அவசியமாகும்.

பல்வேறு கற்றல் செயற்பாடுகளைப் பயன்படுத்துதல்.

மாணவர்கள் கற்றலின் போது பல்வேறு இயல்புகளைக் காட்டுகின்றமையால் அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர் பல்வேறு கற்றற் செயற்பாடுகளை ஒழுங்கு செய்வது அவசியமாகும். இதற்கமைய மாணவரிடத்தே காணப்படும் பல்வேறு திறமைகளையும் ஆற்றல்களையும் மேலும் விருத்தி செய்யலாம். இதற்காக ஒரு நீண்ட செயற்பாட்டை ஒழுங்கு செய்வதற்குப் பதிலாக எளிமையான ஒரு செயற்பாட்டுத்தொடரை ஒழுங்கு செய்வதன் மூலம் மாணவருக்குத் தேவையான அறிவையும் திறன்களையும் வழங்குவதே முக்கியமானதாகும்.

பொருத்தமான கற்றல் சந்தர்ப்பங்களை ஒழுங்கு செய்தல்.

பரிகாரக் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள் அதற்காகப் பொருத்தமான கற்றல் சந்தர்ப்பங்களை ஒழுங்குசெய்து கொள்வது அவசியமாகும். உதாரணமாக, கணிதப் பாடத்துக்காகப் பொருத்தமான விளையாட்டுக்களை ஒழுங்கு செய்யலாம். ஆங்கில மொழிப்பாடத்திற்காக மொழிச் சூழலொன்று கட்டியெழுப்பப்படுவதை மற்றுமோர் உதாரணமாகக் குறிப்பிடலாம்.

www.lkedu.lk

கற்பித்தல் முறைகள்

ஆசிரியர் கருத்துநிலையான எண்ணக்கருக்களை விளக்கும் போது மாணவரது கற்றல் திறன்களுக்கேற்ப உண்மைப்பொருளின் வழியே கருத்துநிலையான உதாரணங்களைப் பயன்படுத்தி, எளிமையான படிமுறைகளின் வழியே அதனைச் செய்தல் வேண்டும். ஆசிரியர் தமது மாணவரைச் செயல்ரீதியில் ஈடுபாடு கொள்ளச் செய்வதற்காகப் போதுமான அளவுக்கு கற்றல் சாதனங்களைப் பயன்படுத்துவதும் விளையாட்டுக்களையும் செயற்பாடுகளையும் பயன்படுத்துவதும் முக்கியமானது. மேலும் பிரதான விடயங்களை விளக்கும் போது தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தையும் வசமுள்ள ஏனைய சகல வளங்களையும் பயன்படுத்தி மாணவர்கள் விடயங்களை இலகுவாக விளங்கிக் கொள்ள வகைசெய்தல் வேண்டும்.

தகவல்களை தெளிவாக வழங்குதல்.

கற்றலில் இடர்ப்படும் பெரும்பாலான மாணவரிடத்தே எழுத்து மொழி மூலம் விளக்கம் பெறும் ஆற்றல் குறைவான மட்டத்திலேயே காணப்படுகின்றது. எனவே ஆசிரியர் தகவல்களை எளிமையான வடிவத்தில் தெளிவாக வழங்குவதன் மூலம் மாணவர்கள் விடயத்தினைத் தவறாகப் புரிந்துகொள்ளும் நிலையைத் தவிர்க்கலாம். மேலும் கற்றற் செயற்பாடுகளின் போது அதன்படி முறைகளை எளிமையான வகையில் விளக்குதல் வேண்டும். ஆசிரியர் மாணவரது தேவைகளின் பேரில் அச்செயற்பாடுகளின் படிமுறைகளை மீண்டும் மீண்டும் விளக்குவதும் பயனுடையதாகும்.

பிரதான விடயங்களைப் பொழிப்பாக்கி முன்வைத்தல்.

பாடத்தின் முடிவில் ஆசிரியர் தாம் நடத்திய பாடத்தின் பிரதான விடயங்களை மீண்டும் நினைவூட்டி அவ்விடயங்களைக் கரும்பலகையில் குறிப்பிடுதல் வேண்டும். கட்புல, செவிப்புல சாதனங்களின் துணையுடன் கற்ற விடயங்களை மீள நினைவு கூர்வதற்கு அது துணையாக அமையும். மேலும் மாணவர்கள் கற்ற விடயங்களை அவர்களது நாளாந்த வாழ்க்கை அனுபவங்களுடன் தொடர்புபடுத்திக்கொள்ளுமாறு மாணவரை வழிப்படுத்துவதும் அவசிய மாகும்.

தரம் 6 - 11 கணிதபாட செயற்றிட்டக் குழு

www.lkedu.lk

கலைத்திட்டக் குழு

ஆலோசனை:

பேராசிரியர் டபிள்யு. எம். அபேரத்ன பண்டார
பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்.

எம். எவ். எஸ். பீ. ஜயவர்தன
பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
விஞ்ஞான தொழினுட்பப் பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

மேற்பார்வை:

கே. ரஞ்சித் பத்மசிறி
பணிப்பாளர்,
கணிதத்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

திட்டமிடலும் இணைப்பாக்கமும்:

ஜீ. எல். கருணாரத்ன
சிரேஷ்ட கல்வியியலாளர்
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பெறுபேறு
மேம்பாட்டுச் செயற்றிட்ட தலைவர்,
கணிதத்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

தமிழ்மொழி மூல இணைப்பாக்கம்:

எஸ். இராஜேந்திரன்
விரிவுரையாளர்,
தேசிய கல்வி நிறுவகம்.

www.lkedu.lk

வெளிவாரி வளப்பங்களிப்பு:

திரு.எச்.எம்.ஏ. ஜயசேன	ஆசிரிய ஆலோசகர் (ஓய்வு பெற்ற)
திரு.வை.வீ.ஆர். வித்தாரம	ஆசிரிய ஆலோசகர் வலயக் கல்வி அலுவலகம், தெகியோவிட்ட
திரு. என்.ஜீ. செனவிரத்ன	ஆசிரிய ஆலோசகர் வலயக் கல்வி அலுவலகம், தெகியோவிட்ட
திரு.ஆர்.பீ.டீ.சீ. ஜயசிங்ஹ	ஆசிரிய ஆலோசகர் வலயக் கல்வி அலுவலகம், தெகியோவிட்ட
திரு. டபிள்யூ. ரத்னாயக்க	செயற்றிட்ட அதிகாரி (ஓய்வு பெற்ற)
திரு. சம்பத் லொக்குமுதலி	ஆசிரியர் சேவை ஜனாதிபதி வித்தியாலயம், மகரகம
திருமதி.ஜீ.எச்.எஸ்.ரஞ்சினி த சில்வா	ஆசிரியர் தர்மபால வித்தியாலம், பன்னிப்பிட்டிய
திருமதி எம்.எம்.எஸ்.கே. மாரசிங்க	ஆசிரிய ஆலோசகர் வலயக் கல்வி அலுவலகம், வத்தேகம.
திருமதி. டபிள்யூ. எம்.பீ. வீரசேக்கர	ஆசிரிய ஆலோசகர் வலயக் கல்வி அலுவலகம், வத்தேகம.

கணனி பக்க அமைப்பு: திரு. ஏ. எஸ். சத்தியசீலன்,
ஆசிரியர்.
மட்/ககு/வந்தாறுமூலை விஷ்ணு ம.வி.

மொழிச்செம்மையாக்கம்: திரு. என். ரகுநாதன்.
ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்.

அட்டைப் படம்: தேசிய கல்வி நிறுவகம்

www.lkedu.lk

பொருளடக்கம்

பரிகாரக் கற்பித்தல்

		பக்கம்
1	**அடிப்படைக் கணிதச் செய்கைகள் - 1**	**1 - 9**
1.1.	விடயப் பகுப்பாய்வு	
1.2	வினாப்பத்திரம்	
1.3	விடைகளும் அறிவுறுத்தல்களும்	
2	**அடிப்படைக் கணிதச் செய்கைகள் - 11**	**10 - 14**
2.1	விடயப் பகுப்பாய்வு	
2.2	வினாப்பத்திரம்	
2.3	விடைகளும் அறிவுறுத்தல்களும்	
3	**அடிப்படைக் கணிதச் செய்கைகள் - 111**	**15 - 18**
3.1	விடயப் பகுப்பாய்வு	
3.2	வினாப்பத்திரம்	
3.3	விடைகளும் அறிவுறுத்தல்களும்	
4	**அடிப்படைக் கணிதச் செய்கைகள் - iv**	**19 - 23**
4.1	விடயப் பகுப்பாய்வு	
4.2	வினாப்பத்திரம்	
4.3	விடைகளும் அறிவுறுத்தல்களும்	
5	**எண்கோலங்கள்**	**24 - 34**
5.1	விடயப் பகுப்பாய்வு	
5.2	வினாப்பத்திரம்	
5.3	விடைகளும் அறிவுறுத்தல்களும்	
6	**பின்னங்கள் - 1**	**35 - 46**
6.1	விடயப் பகுப்பாய்வு	
6.2	வினாப்பத்திரம்	
6.3	விடைகளும் அறிவுறுத்தல்களும்	
7	**பின்னங்கள் - 11**	**47 - 56**
7.1	விடயப் பகுப்பாய்வு	
7.2	வினாப்பத்திரம்	
7.3	விடைகளும் அறிவுறுத்தல்களும்	
8	**பின்னங்கள் - 111**	**57 - 65**
8.1	விடயப் பகுப்பாய்வு	
8.2	வினாப்பத்திரம்	
8.3	விடைகளும் அறிவுறுத்தல்களும்	

www.lkedu.lk

9	**தசமங்கள் - 1**	**66 - 74**
9.1	விடயப் பகுப்பாய்வு	
9.2	வினாப்பத்திரம்	
9.3	விடைகளும் அறிவுறுத்தல்களும்	
10	**தசமங்கள் - 11**	
10.1	விடயப் பகுப்பாய்வு	**75 - 79**
10.2	வினாப்பத்திரம்	
10.3	விடைகளும் அறிவுறுத்தல்களும்	
11	**தசமங்கள் - 111**	**80 - 83**
11.1	விடயப் பகுப்பாய்வு	
11.2	வினாப்பத்திரம்	
11.3	விடைகளும் அறிவுறுத்தல்களும்	
12	**விகிதங்கள் - 1**	**84 - 89**
12.1	விடயப் பகுப்பாய்வு	
12.2	வினாப்பத்திரம்	
12.3	விடைகளும் அறிவுறுத்தல்களும்	
13	**விகிதங்கள் - 11**	**90 - 93**
13.1	விடயப் பகுப்பாய்வு	
13.2	வினாப்பத்திரம்	
13.3	விடைகளும் அறிவுறுத்தல்களும்	
14	**சதவீதம் - 1**	**94 - 101**
14.1	விடயப் பகுப்பாய்வு	
14.2	வினாப்பத்திரம்	
14.3	விடைகளும் அறிவுறுத்தல்களும்	
15	**சதவீதம் - 11**	**102 - 104**
15.1	விடயப் பகுப்பாய்வு	
15.2	வினாப்பத்திரம்	
15.3	விடைகளும் அறிவுறுத்தல்களும்	
16	**சதவீதம் - 111**	**105 - 110**
16.1	விடயப் பகுப்பாய்வு	
16.2	வினாப்பத்திரம்	
16.3	விடைகளும் அறிவுறுத்தல்களும்	
17	**வர்க்கமூலம்**	**111 - 120**
17.1	விடயப் பகுப்பாய்வு	
17.2	வினாப்பத்திரம்	
17.3	விடைகளும் அறிவுறுத்தல்களும்	

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை

எண்கள்

1. அடிப்படை கணிதச் செய்கைகள்

- நிலைக்குத்தாகக் கூட்டல்
- கிடையாகக் கூட்டல்.
- கழித்தல்.
- பெருக்கலும் வகுத்தலும்

(i) விடயப் பகுப்பாய்வு

(ii) வினாப்பத்திரம்

(iii) விடைகளும் அறிவுறுத்தல்களும்

www.lkedu.lk

விடயப் பகுப்பாய்வு

1.1 நிரலாகக் கூட்டல்.

1.2 நிரையாகக் கூட்டல்.

1.3 நிரலாகக் கழித்தல்.

1.4 நிரையாகக் கழித்தல்.

1.5 கழித்தல் தொடர்பான பிரசினங்கள்.

1.6 எண்களைப் பெருக்குதல்.

1.7 எண்களை வகுத்தல்.

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை
1. அடிப்படை கணிதச் செய்கைகள்
1.1 நிரலாகக் கூட்டுதல்
விடயப் பகுப்பாய்வு

வினா இல	குறிக்கோள் இல	குறிக்கோள்
	1.1	நிரலாகக் கூட்டுதல்.
01.	1.1.1	இரண்டு ஓரிலக்க எண்களை நிரலாகக் கூட்டுவார்
02.	1.1.2	இரண்டு எண்களை நிரலாகக் கூட்டும் போது பரிவர்த்தனை விதிக்கு உட்படுவதைக் காண்பார். அதனை உறுதி செய்வார்.
03.	1.1.3	கொண்டு செல்லல் அற்றதாக, இரண்டு ஈரிலக்க எண்களை நிரலாகக் கூட்டுவார்.
04.	1.1.4	ஒன்றினிடத்தில் கொண்டுசெல்லல் உள்ளதாக, இரண்டு, ஈரிலக்க எண்களை நிரலாகக் கூட்டுவார்.
05.	1.1.5	பத்தினிடத்தில் கொண்டு செல்லல் உள்ளதாக, இரண்டு ஈரிலக்க எண்களை நிரலாகக் கூட்டுவார்.
06.	1.1.6	ஒன்றினிடத்திலும் பத்தினிடத்திலும் கொண்டு செல்லல் உள்ளதாக இரண்டு ஈரிலக்க எண்களை நிரலாகக் கூட்டுவார்.
07.	1.1.7	கொண்டு செல்லல் அற்றதாக, இரண்டு மூவிலக்க எண்களை நிரலாகக் கூட்டுவார்.
08.	1.1.8	ஒன்றினிடத்தில் மட்டும் கொண்டு செல்லல் உள்ளதாக, இரண்டு மூவிலக்க எண்களை நிரலாகக் கூட்டுவார்.
09.	1.1.9	பத்தினிடத்தில் மட்டும் கொண்டு செல்லல் உள்ளதாக, இரண்டு மூவிலக்க எண்களை நிரலாகக் கூட்டுவார்.
10.	1.1.10	நூறினிடத்தில் மட்டும் கொண்டு செல்லல் உள்ளதாக, இரண்டு மூவிலக்க எண்களை நிரலாகக் கூட்டுவார்.
11.	1.1.11	ஒன்றினிடத்திலும் பத்தினிடத்திலும் மட்டும் கொண்டு செல்லல் உள்ளதாக, இரண்டு மூவிலக்க எண்களை நிரலாகக் கூட்டுவார்.
12.	1.1.12	ஒன்றினிடத்திலும் நூறினிடத்திலும் மட்டும் கொண்டு செல்லல் உள்ளதாக, இரண்டு மூவிலக்க எண்களை நிரலாகக் கூட்டுவார்.
13.	1.1.13	பத்தினிடத்திலும் நூறினிடத்திலும் மட்டும் கொண்டு செல்லல் உள்ளதாக, இரண்டு மூவிலக்க எண்களை நிரலாகக் கூட்டுவார்.
14.	1.1.14	ஒன்றினிடத்தில், பத்தினிடத்தில், நூறினிடத்தில் கொண்டு செல்லல் உள்ளதாக இரண்டு மூவிலக்க எண்களை நிரலாகக் கூட்டுவார்.
15.	1.1.15	நான்கு இலக்கங்களிலும் கூடாதவாறு, இரண்டு எண்களை நிரலாகக் கூட்டுவார்.
16.	1.1.16	கொண்டு செல்லல் அற்றதாக, நிரலாகக் கூட்டலைச் செய்யக்கூடியதாக வசனங்கள் கொண்ட பிரசினங்களைத் தீர்ப்பார்.
17.	1.1.17	ஒன்றினிடத்தில், பத்தினிடத்தில் கொண்டு செல்லல் உள்ளதாக, நிரலாகக் கூட்டல் உள்ளதான வசனங்கள் கொண்ட கணித பிரசினங்களைத் தீர்ப்பார்.
18.	1.1.18	ஒன்றினிடத்தில், பத்தினிடத்தில், நூறினிடத்தில் கொண்டு செல்லல் உள்ளதாக, நிரலாகக் கூட்டல் உள்ளதான வசனங்கள் கொண்ட கணித பிரசினங்களைத் தீர்ப்பார்.
19.	1.1.19	நான்கு இலக்கங்களிலும் கூடாத எண்களுடன் நிரலாகக் கூட்டல் உள்ளதான வசனங்களில் தரப்பட்டுள்ள கணித பிரசினங்களைத் தீர்ப்பார்.

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை

1. அடிப்படை கணிதச் செய்கைகள்

1.1 நிரலாகக் கூட்டுதல்

வினாப்பத்திரம்

1. கூட்டுக.

(i)	(ii)	(iii)	(iv)
2	5	4	3
+ 3	+ 3	+ 4	+ 2
———	———	———	———

2. கூட்டுக.

(i)	(ii)	(iii)	(iv)
5	6	9	8
+ 7	+ 8	+ 6	+ 6
———	———	———	———

3. கூட்டுக.

(i)	(ii)	(iii)	(iv)
4	3	2	0
+ 3	+ 4	+ 0	+ 2
———	———	———	———

4. கூட்டுக.

(i)	(ii)	(iii)	(iv)
1 4	3 0	5 2	3 5
+ 2 3	+ 4 6	+ 3 6	+ 6 4
———	———	———	———

5. கூட்டுக.

(i)	(ii)	(iii)	(iv)
4 6	3 8	7 3	4 6
+ 2 7	+ 5 4	+ 1 7	+ 3 8
———	———	———	———

6. கூட்டுக.

(i)	(ii)	(iii)	(iv)
5 3	7 4	8 5	7 8
+ 6 2	+ 6 3	+ 3 2	+ 4 0
———	———	———	———

www.lkedu.lk

7. கூட்டுக.

(i)	(ii)	(iii)	(iv)
7 6	8 5	6 8	4 9
+ 5 7	+ 9 7	+ 8 4	+ 9 4
═══	═══	═══	═══

8. கூட்டுக.

(i)	(ii)	(iii)	(iv)
1 2 3	3 8 4	4 5 2	5 2 5
+ 5 6 4	+ 2 1 5	+ 3 2 6	+ 2 4 1
═══	═══	═══	═══

9. கூட்டுக.

(i)	(ii)	(iii)	(iv)
5 2 6	3 4 8	5 1 9	4 0 8
+ 2 4 7	+ 4 2 7	+ 3 2 6	+ 2 4 7
═══	═══	═══	═══

10. கூட்டுக.

(i)	(ii)	(iii)	(iv)
3 7 2	1 8 3	2 6 4	5 6 0
+ 4 5 6	+ 7 3 1	+ 3 6 2	+ 2 9 3
═══	═══	═══	═══

11. கூட்டுக.

(i)	(ii)	(iii)	(iv)
6 2 3	8 5 2	7 4 4	5 4 0
+ 5 4 1	+ 4 2 6	+ 5 2 3	+ 8 2 2
═══	═══	═══	═══

12. கூட்டுக.

(i)	(ii)	(iii)	(iv)
3 7 6	5 7 8	7 6 9	4 8 7
+ 2 8 5	+ 1 9 8	+ 1 5 4	+ 2 8 5
═══	═══	═══	═══

13. கூட்டுக.

(i)	(ii)	(iii)	(iv)
5 2 8	8 1 8	9 3 6	7 0 9
+ 6 3 4	+ 4 2 7	+ 2 4 7	+ 4 2 8
═══	═══	═══	═══

www.lkedu.lk

14. கூட்டுக.

(i)	(ii)	(iii)	(iv)
6 7 3	8 5 2	7 4 4	5 4 0
+ 5 4 1	+ 3 6 1	+ 5 6 2	+ 8 6 2
═══	═══	═══	═══

15. கூட்டுக.

(i)	(ii)	(iii)	(iv)
7 8 6	6 7 9	6 9 8	5 0 9
+ 4 5 9	+ 8 5 4	+ 5 3 4	+ 7 9 6
═══	═══	═══	═══

16. கூட்டுக.

(i)	(ii)	(iii)
4 3 5 2	1 0 3 6	7 5 8 3
+ 2 4 1 7	+ 5 3 1 8	+ 4 5 2 8
═══	═══	═══

17. (i) ரவியிடம் 52 முத்திரைகள் உண்டு.
தயானிடம் 33 முத்திரைகள் உண்டு.
இருவரிடமும் உள்ள மொத்த முத்திரைகளின் எண்ணிக்கை யாது?

.....

(ii) கமலினியின் மாலையில் உள்ள மணிகளின் எண்ணிக்கை 28
மாலாவின் மாலையில் உள்ள மணிகளின் எண்ணிக்கை 41
இருவரது மாலைகளிலும் உள்ள மணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

(iii) சுதேசனிடம் 12 மாம்பழங்கள் உண்டு.
மரத்திலிருந்து மேலும் 15 மாம்பழங்களை அவர் பறித்தார்.
இப்போது அவரிடம் உள்ள மாம்பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

18. (i) கவிதா 86 நெல்லிக்காய்களைப் பொறுக்கினாள்.
அவளது தம்பி 129 நெல்லிக்காய்களைப் பொறுக்கினான்.
இருவரும் பொறுக்கிய நெல்லிக் காய்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

(ii) ஒரு வியாபாரி திங்கட்கிழமை 345 ஐஸ்கிறீம்கள் விற்றார்.
செவ்வாய்க்கிழமை 278 ஐஸ்கிறீம்களை விற்றார்.
இந்த இரு நாட்களிலும் மொத்தமாக எத்தனை ஐஸ்கிறீம் விற்றார்.

.....

(iii) அம்ரா 436 மல்லிகை மலர்களைப் பறித்தாள்.
பாத்திமா 465 மல்லிகை மலர்களைப் பறித்தாள்.
இருவரும் பறித்த மொத்த மல்லிகை மலர்களின் எண்ணிக்கை யாது?

.....

www.lkedu.lk

19. (i) ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையில் ஒரு நாளில் உற்பத்தி செய்யப்பட்ட சப்பாத்துச் சோடிகளின் எண்ணிக்கை 748. அதே நாளில் வேறோரு தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட சப்பாத்துச் சோடிகளின் எண்ணிக்கை 564. இரு தொழிற்சாலைகளிலும் அதே நாளில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த சப்பாத்துச் சோடிகளின் எண்ணிக்கை யாது?

.....

(ii) ஒரு பாத்திரத்தின் விலை ரூ.785. ஒரு கேத்தலின் விலை ரூ. 528 ஒரு பாத்திரத்தையும், ஒரு கேத்தலையும் வாங்குவதற்குத் தேவையான மொத்தப் பணம் எவ்வளவு?

.....

(iii) A என்னும் பெட்டியினுள் அடுக்கக்கூடிய சவர்காரக் கட்டிகளின் எண்ணிக்கை 587. B என்னும் பெட்டியினுள் அடுக்கக் கூடிய அதே வகை சவர்காரக் கட்டிகளின் எண்ணிக்கை 625. A , B இரண்டு பெட்டிகளிலும் அடுக்கக் கூடிய சவர்காரக் கட்டிகளின் உயர் எண்ணிக்கை யாது?

.....

20. (i) ஒரு பாடசாலையில் 2035 மாணவர்கள் உள்ளனர். வேறோரு பாடசாலையில் 1483 மாணவர்கள் உள்ளனர். இரண்டு பாடசாலைகளிலும் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

.....

(ii) அண்ணனின் சேமிப்புக் கணக்கில் ரூ. 5836 உம், தம்பியின் சேமிப்புக் கணக்கில் ரூ. 4592 ம் உண்டு. இருவரும் சேமித்த மொத்தப் பணம் எவ்வளவு?

.....

(iii) ஒரு ரம்புட்டான் வியாபாரி விற்பதற்காக, ஒரு மரத்தில் 3565 ரம்புட்டான்களையும் இன்னுமொரு மரத்தில் 4348 ரம்புட்டான்களையும் பறித்தார். இரு மரங்களிலும் பறிக்கப்பட்ட ரம்புட்டான்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை

1. அடிப்படை கணிதச் செய்கைகள்

1.1 நிரலாகக் கூட்டுதல்

விடைகளும் அறிவுறுத்தல்களும்

விடை			அறிவுறுத்தல்கள்
01.	(i)	5	நிரலாகக் கூட்டல் கருதப்படுகின்றது
	(ii)	8	
	(iii)	8	
	(iv)	5	
02.	(i)	12	நிரலாகக் கூட்டல் கருதப்படுகின்றது
	(ii)	14	
	(iii)	15	
	(iv)	14	
03.	(i)	7	நிரலாகக் கூட்டல் கருதப்படுகின்றது
	(ii)	7	
	(iii)	2	
	(iv)	2	
04.	(i)	37	நிரலாகக் கூட்டல் கருதப்படுகின்றது
	(ii)	76	
	(iii)	88	
	(iv)	99	
05.	(i)	73	நிரலாகக் கூட்டல் கருதப்படுகின்றது
	(ii)	92	
	(iii)	90	
	(iv)	84	
06.	(i)	115	நிரலாகக் கூட்டல் கருதப்படுகின்றது
	(ii)	137	
	(iii)	117	
	(iv)	118	
07.	(i)	133	
	(ii)	182	
	(iii)	152	
	(iv)	143	
08.	(i)	687	
	(ii)	599	
	(iii)	778	
	(iv)	766	
09.	(i)	773	
	(ii)	775	
	(iii)	845	
	(iv)	655	

www.lkedu.lk

10.	(i)	828
	(ii)	914
	(iii)	626
	(iv)	853
11.	(i)	1164
	(ii)	1278
	(iii)	1267
	(iv)	1362
12.	(i)	661
	(ii)	776
	(iii)	923
	(iv)	772
13.	(i)	1162
	(ii)	1245
	(iii)	1183
	(iv)	1137
14.	(i)	1214
	(ii)	1213
	(iii)	1306
	(iv)	1402
15.	(i)	1245
	(ii)	1533
	(iii)	1232
	(iv)	1305
16.	(i)	6769
	(ii)	6354
	(iii)	12111
17.	(i)	85
	(ii)	69
	(iii)	27
18.	(i)	215
	(ii)	623
	(iii)	901
19.	(i)	1312
	(ii)	ரூ. 1313
	(iii)	1212
20.	(i)	3518
	(ii)	ரூ. 10428
	(iii)	7913

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை
1. அடிப்படை கணிதச் செய்கைகள்
1.2 நிரையாகக் கூட்டுதல்
விடயப் பகுப்பாய்வு

வினா இல	குறிக்கோள் இல	குறிக்கோள்
	1.2	**நிரையாகக் கூட்டுதல்.**
01.	1.2.1	இரண்டு ஓரிலக்க எண்களை நிரையாகக் கூட்டுவார்
02.	1.2.2	இரண்டு எண்களை நிரையாகக் கூட்டும் போது பரிவர்த்தனை விதிக்கு உட்படுவதைக் காண்பார். அதனை உறுதி செய்வார்.
03.	1.2.3	கொண்டு செல்லல் அற்றதாக, இரண்டு ஈரிலக்க எண்களை நிரையாகக் கூட்டுவார்.
04.	1.2.4	ஒன்றினிடத்தில் கொண்டுசெல்லல் உள்ளதாக, இரண்டு, ஈரிலக்க எண்களை நிரையாகக் கூட்டுவார்.
05.	1.2.5	பத்தினிடத்தில் கொண்டு செல்லல் உள்ளதாக, இரண்டு ஈரிலக்க எண்களை நிரையாகக் கூட்டுவார்.
06.	1.2.6	ஒன்றினிடத்திலும் பத்தினிடத்திலும் கொண்டு செல்லல் உள்ளதாக இரண்டு ஈரிலக்க எண்களை நிரையாகக் கூட்டுவார்.
07.	1.2.7	கொண்டு செல்லல் அற்றதாக, இரண்டு மூவிலக்க எண்களை நிரையாகக் கூட்டுவார்.
08.	1.2.8	ஒன்றினிடத்தில் மட்டும் கொண்டு செல்லல் உள்ளதாக, இரண்டு மூவிலக்க எண்களை நிரையாகக் கூட்டுவார்.
09.	1.2.9	பத்தினிடத்தில் மட்டும் கொண்டு செல்லல் உள்ளதாக, இரண்டு மூவிலக்க எண்களை நிரையாகக் கூட்டுவார்.
10.	1.2.10	நூறினிடத்தில் மட்டும் கொண்டு செல்லல் உள்ளதாக, இரண்டு மூவிலக்க எண்களை நிரையாகக் கூட்டுவார்.
11.	1.2.11	ஒன்றினிடத்திலும் பத்தினிடத்திலும் மட்டும் கொண்டு செல்லல் உள்ளதாக, இரண்டு மூவிலக்க எண்களை நிரையாகக் கூட்டுவார்.
12.	1.2.12	ஒன்றினிடத்திலும் நூறினிடத்திலும் மட்டும் கொண்டு செல்லல் உள்ளதாக, இரண்டு மூவிலக்க எண்களை நிரையாகக் கூட்டுவார்.
13.	1.2.13	பத்தினிடத்திலும் நூறினிடத்திலும் மட்டும் கொண்டு செல்லல் உள்ளதாக, இரண்டு மூவிலக்க எண்களை நிரையாகக் கூட்டுவார்.
14.	1.2.14	ஒன்றினிடத்தில், பத்தினிடத்தில், நூறினிடத்தில் கொண்டு செல்லல் உள்ளதாக இரண்டு மூவிலக்க எண்களை நிரையாகக் கூட்டுவார்.
15.	1.2.15	நான்கு இலக்கங்களிலும் கூடாதவாறு, இரண்டு எண்களை நிரையாகக் கூட்டுவார்.
16.	1.2.16	தரப்பட்ட தகவல்களைக் கொண்டு நிரை மற்றும் நிரலாகக் கூட்டலைப் பெறுவதன் மூலம் தரப்பட்ட அட்டவணையை நிரப்புவார்

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை
1. அடிப்படை கணிதச் செய்கைகள்
1.2 நிரையாகக் கூட்டுதல்
வினாப்பத்திரம்

1.2 நிரையாகக் கூட்டுதல்.

01. நிரையாகக் கூட்டுக.
I) 2 + 3 = ... II) 3 +4 = ... III) 2 + 6 = ... IV) 6 + 3 = ...

02. நிரையாகக் கூட்டுக.
I) 3 + 8 = ... II) 5 + 6 = ... III) 6 + 8 = ... IV) 6 + 7 = ...

03. நிரையாகக் கூட்டுக.
I) 7 + 5 = ... II) 5 + 7 = ... III) 9 + 6 = ... IV) 6 + 9 = ...

04. நிரையாகக் கூட்டுக.
I) 24 + 33 = ... II) 32 + 47 = ...
III) 51 + 27 = ... IV) 31 + 62 = ...

05. நிரையாகக் கூட்டுக.
I) 35 + 27 = ... II) 48 + 36 = ...
III) 56 + 29 = ... IV) 29 + 45 = ...

06. நிரையாகக் கூட்டுக.
I) 41+ 63 = ... II) 72 + 53 = ...
III) 54 + 83 = ... IV) 80 + 31 = ...

07. நிரையாகக் கூட்டுக.
I) 53 + 69 = ... II) 86 + 37 = ...
III) 76 + 58 = ... IV) 99 + 28 = ...

08. நிரையாகக் கூட்டுக.
I) 123 + 345 = ... II) 365 + 423 = ...
III) 614+ 263 = ... IV) 234+ 514 = ...

09. நிரையாகக் கூட்டுக.
I) 247 + 328 = ... II) 309 + 427 = ...
III) 236 + 144 = ... IV) 178 + 513 = ...

10. நிரையாகக் கூட்டுக.
I) 276 + 141 = ... II) 180 + 437 = ...
III) 465 + 382 = ... IV) 485 + 151 = ...

www.lkedu.lk

11. நிரையாகக் கூட்டுக.

I) 672 + 713 = ... II) 853 + 442 = ...

III) 928 + 351 = ... IV) 833 + 544 = ...

12. நிரையாகக் கூட்டுக.

I) 496 + 238 = ... II) 275 + 366 = ...

III) 687 + 194 = ... IV) 387 + 478 = ...

13. நிரையாகக் கூட்டுக.

I) 827+ 355 = ... II) 936 + 416 = ...

III) 907+ 429 = ... IV) 718 + 357 = ...

14. நிரையாகக் கூட்டுக.

I) 862+ 385 = ... II) 772+ 435 = ...

III) 782 + 831 = ... IV) 586 +832 = ...

15. நிரையாகக் கூட்டுக.

I) 885 + 499 = ... II) 697+ 584 = ...

III) 999 + 475 = ... IV) 498 +706 = ...

16. நிரையாகக் கூட்டுக.

I) 4 701 + 1 508 = ... II) 3 228 + 4 392 = ...

III) 9 273+ 5 473 = ... IV) 2 575 + 3 992 = ...

17. கணிதச் செயலமர்வொன்றில் பங்குபற்றி நான்கு பாடசாலைகளின் மாணவர்கள் பற்றிய தகவல்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அதில் நிரலான கூட்டல், நிரையான கூட்டல் என்பவற்றைப் பயன்படுத்தி அட்டவணையை நிரப்புக.

பாடசாலை	தரம் 9 மாணவர்கள்	தரம் 10 மாணவர்கள்	தரம் 11 மாணவர்கள்	மொத்த எண்ணிக்கை
A	135	178	182	.....
B	280	293	313	.....
C	85	137	148	.....
D	310	308	336	.....
மொத்தம்	.....	.....	.....	.....

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை
1. அடிப்படை கணிதச் செய்கைகள்
1.2 நிரையாகக் கூட்டுதல்
விடைகளும் அறிவுறுத்தல்களும்

விடை			அறிவுறுத்தல்கள்
01.	(i)	5	நிரையான கூட்டல் கவனத்தில் கொள்ளப்படுகின்றது நிரலாக மீண்டும் எழுதிக் கூட்டுதல் கூடாது.
	(ii)	7	
	(iii)	8	
	(iv)	9	
02.	(i)	11	
	(ii)	11	
	(iii)	14	
	(iv)	13	
03.	(i)	12	
	(ii)	12	
	(iii)	15	
	(iv)	15	
04.	(i)	57	
	(ii)	79	
	(iii)	78	
	(iv)	93	
05.	(i)	62	
	(ii)	84	
	(iii)	85	
	(iv)	74	
06.	(i)	104	
	(ii)	125	
	(iii)	137	
	(iv)	111	
07.	(i)	122	
	(ii)	123	
	(iii)	134	
	(iv)	127	
08.	(i)	468	
	(ii)	788	
	(iii)	877	
	(iv)	748	

www.lkedu.lk

09.	(i)	575	
	(ii)	736	
	(iii)	380	
	(iv)	691	
10.	(i)	417	
	(ii)	617	
	(iii)	847	
	(iv)	636	
11.	(i)	1385	
	(ii)	1295	
	(iii)	1279	
	(iv)	1377	
12.	(i)	734	
	(ii)	641	
	(iii)	881	
	(iv)	865	
13.	(i)	1182	
	(ii)	1352	
	(iii)	1336	
	(iv)	1075	
14.	(i)	1247	
	(ii)	1207	
	(iii)	1613	
	(iv)	1418	
15.	(i)	1384	
	(ii)	1281	
	(iii)	1474	
	(iv)	1204	
16.	(i)	6209	
	(ii)	7620	
	(iii)	14746	
	(iv)	6567	
17.		495	நிரலாகவும், நிரையாகவும் கூட்டுவது ஆகிய இரண்டும் எதிர்பார்க்கப்படுகிறது
		886	
		370	
		954	
	810 + 916 + 979	2705	

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை
1. அடிப்படை கணிதச் செய்கைகள்
1.3. 1.4, 1.5 கழித்தல்
விடயப் பகுப்பாய்வு

வினா இல	குறிக்கோள் இல	குறிக்கோள்
	1.3	**நிரலாகக் கழித்தல்**
01.	1.3.1	ஓரிலக்க எண்ணிலிருந்து இன்னுமொரு ஓரிலக்க எண்ணை நிரலாகக் கழிப்பார்.
02.	1.3.2	ஈரிலக்க எண்ணிலிருந்து இன்னுமொரு ஈரிலக்க எண்ணை, கொண்டு வருதல் இன்றி நிரலாகக் கழிப்பார்.
03.	1.3.3	ஈரிலக்க எண்ணிலிருந்து இன்னுமொரு ஈரிலக்க எண்ணை கொண்டு வருதல் உடன் நிரலாகக் கழிப்பார்.
04.	1.3.4	மூவிலக்க எண்ணிலிருந்து இன்னுமொரு மூவிலக்க எண்ணை கொண்டு வருதல் இன்றி நிரலாகக் கழிப்பார்.
05.	1.3.5	மூவிலக்க எண்ணிலிருந்து இன்னுமொரு மூவிலக்க எண்ணை கொண்டு வருதல் உடன் நிரலாகக் கழிப்பார்.
06.	1.3.6	நான்கு இலக்கங்களுக்கு கூடாதவாறு ஒரு எண்ணிலிருந்து இன்னுமொரு எண்ணை நிரலாகக் கழிப்பார்.
	1.4	**நிரையாகக் கழித்தல்**
07.	1.4.1	ஓரிலக்க எண்ணிலிருந்து இன்னுமொரு ஓரிலக்க எண்ணை நிரையாகக் கழிப்பார்.
08.	1.4.2	ஈரிலக்க எண்ணிலிருந்து இன்னுமொரு ஈரிலக்க எண்ணை, கொண்டு வருதல் இன்றி நிரையாகக் கழிப்பார்.
09.	1.4.3	ஈரிலக்க எண்ணிலிருந்து இன்னுமொரு ஈரிலக்க எண்ணை கொண்டு வருதல் உடன் நிரையாகக் கழிப்பார்.
10.	1.4.4	மூவிலக்க எண்ணிலிருந்து இன்னுமொரு மூவிலக்க எண்ணை கொண்டு வருதல் இன்றி நிரையாகக் கழிப்பார்.
11.	1.4.5	மூவிலக்க எண்ணிலிருந்து இன்னுமொரு மூவிலக்க எண்ணை கொண்டு வருதல் உடன் நிரையாகக் கழிப்பார்.
12.	1.4.6	நான்கு இலக்கங்களுக்கு கூடாதவாறு ஒரு எண்ணிலிருந்து இன்னு மொரு எண்ணை நிரலாகக் கழிப்பார்.
	1.5	**கழித்தல் தொடர்பான பிரசினங்கள்**
13.	1.5.1	கொண்டுவருதல் இன்றி எண்களைக் கழிக்கக் கூடியதாகவுள்ள வசனங்களில் தரப்பட்டுள்ள கணித பிரசினங்களைத் தீர்ப்பார்.
14.	1.5.2	கொண்டுவருதல் உள்ளதாக எண்களைக் கழிக்கக் கூடியதாகவுள்ள தரப்பட்டுள்ள கணித பிரசினங்களைத் தீர்ப்பார்.

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை
1. அடிப்படை கணிதச் செய்கைகள்
1.3. 1.4, 1.5 கழித்தல்
வினாப்பத்திரம்

1. கழிக்க.

(i)	(ii)	(iii)	(iv)
5	9	8	6
- 3	- 4	- 8	- 0

2. கழிக்க.

(i)	(ii)	(iii)	(iv)
35	47	81	38
- 23	- 25	- 51	- 18

3. கழிக்க.

(i)	(ii)	(iii)	(iv)
77	56	82	36
- 18	- 29	- 28	- 18

4. கழிக்க.

(i)	(ii)	(iii)	(iv)
678	488	708	756
- 234	- 254	- 305	- 435

5. கழிக்க.

(i)	(ii)	(iii)	(iv)
625	640	724	823
- 349	- 284	- 456	- 676

6. கழிக்க.

(i)	(ii)	(iii)	(iv)
4065	7023	9000	7146
- 3481	- 5465	- 7454	- 4566

www.lkedu.lk

நிரையாகக் கழிக்க.

7. I) 7- 4 = ... II) 9 - 3 = ... III) 6 - 6 = ... IV) 8 - 0 = ...

8. I) 36-12 = ... II) 48-23 = ... III) 73-31 = ... IV) 89-72 =.....

9. I) 56-27 = ... II) 83-57 = ... III) 93-68 =..... IV) 90-57 =.....

10. I) 786 - 255 = ... II) 579 - 375 = ...
III) 856 - 333 = ... IV) 366 - 144 = ...

11. I) 653 - 237 = ... II) 872 - 628 =.....
III) 451 - 348 =..... IV) 362 -139 = ...

12. I) 853 - 476 =..... II) 612 - 436 =.....
III) 600 - 285 =..... IV) 536 - 267 =.....

தீர்க்க.

13. (i) நிமலனிடம் 38 மாபிள்கள் உண்டு. அதிலிருந்து 14 மாபிள்களை கமலனுக்குக் கொடுத்தார். நிமலனிடம் மீதியாகவுள்ள மாபிள்களின் எண்ணிக்கை யாது?

.....

(ii) பத்மாவிடம் ரூ. 375 உண்டு. அதிலிருந்து ரூ. 246 ஐச் செலவு செய்தார். இப்போது பத்மாவிடம் எஞ்சியுள்ள பணம் எவ்வளவு?

.....

(iii) ஒரு வியாபாரி விற்பதற்காக 398 தோடம்பழங்கள் கொண்ட பெட்டியை வாங்கினார். அவர் அன்று விற்ற தோடம்பழங்களின் எண்ணிக்கை 278 எனின் எஞ்சியுள்ள தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது?

.....

14. (i) ஒரு மனிதன் தனது விவசாயப் பண்ணையிலிருந்து 543 கிலோகிராம் நிறையான பூசணிக்காய்களை விற்பதற்காகச் சந்தைக்குக் கொண்டு சென்றார். அவர் சந்தையில் 468 கிலோக்கிராம் பூசணிக் காய்களை விற்றார். அன்று விற்க முடியாமல் போன பூசணிக் காய்களின் நிறை யாது?

.....

(ii) வாழைக்குலை ஒன்றில் 674 காய்கள் உண்டு. அவற்றுள் 488 காய்கள் பழுத்தன. பழுக்காத காய்களின் எண்ணிக்கை யாது? .....

(iii) கவிதாவிடம் ரூ. 931 உண்டு. அவர் அதிலிருந்து ரூ. 578 இற்குத் துணி வாங்கினார். அவரிடம் எஞ்சியுள்ள பணம் எவ்வளவு ? .....

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை

1. அடிப்படை கணிதச் செய்கைகள்

1.3. 1.4, 1.5 கழித்தல்

விடைகளும் அறிவுறுத்தல்களும்

விடை	அறிவுறுத்தல்கள்
01. (i) 2 (ii) 5 (iii) 0 (iv) 6	நிரலாகக் கழித்தல்
02. (i) 12 (ii) 22 (iii) 30 (iv) 20	
   (ii) நிறுவனமொன்றில் நாளொன்றுக்கான வருமானத்திற்கும் செலவிற்கும் இடையிலான விகிதம் 3 : 2 ஆகும். செலவு ரூபா. 6000 ஆகவுள்ள தினமொன்றில் நிறுவனத்தின் வருமானத்தை சமவலு விகிதம் மூலம் காண்க.

   (iii) வியாபாரமொன்றில் பங்குகொண்ட குமாரும் ரவியும் பெற்றுக்கொண்ட இலாபத்தை அவர்களின் முதலீடுகளின் படி 5 : 4 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளத் தீர்மானித்தனர். குமாருக்கு ரூபா. 10000 கிடைத்தால் ரவிக்குக் கிடைக்கும் இலாபத்தை, சமவலு விகிதத்தின் மூலம் காண்க.

3. (i) நிமலனும் விமலனும் ரூ. 2000 ஐ 3 : 7 என்ற விகிதப்படி பகிர்ந்த போது ரூ. 2000 இன் என்ன பின்னம் வீதம் நிமலனுக்கும் விமலனுக்கும் கிடைக்கும்.

   (ii) பயிர் அறுவடையின் 60 kg ஐ சுரேஸ் , அமல் ஆகிய இருவருக்கிடையில் 1 : 3 என்ற விகிதத்தில் பகிர்ந்த போது அவர்கள் இருவருக்கும் கிடைக்கும் அளவுகளை வெவ்வேறாக காண்க.

   (iii) ஒரு நேர்கோட்டின் மீது அமைந்துள்ள அடுத்துள்ள கோணங்களின் கூட்டுத்தொகை 180^0 ஆகும். இந்த இரு கோணங்களும் 2 : 3 என்ற விகிதத்தில் அமைந்தால், ஒவ்வொரு கோணமும் 180^0 இன் என்ன பின்னம் என்பதை வெவ்வேறாக எழுதவும்.

4. (i) நிமலும் விமலும் ரூபா. 2000 ஐ 3 : 7 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்ட போது நிமலுக்கும் விமலுக்கும் கிடைக்கும் தொகையை தனித்தனியே காண்க.

   (ii) பயிர் அறுவடையின் 60 kg ஐ சுரேஸ், அமல் ஆகிய இருவருக்கிடையில் 1 : 3 என்ற விகிதத்தில் பகிர்ந்த போது அவர்கள் இருவருக்கும் கிடைக்கும் அளவுகளை வெவ்வேறாக காண்க.

   (iii) ரூபா 30000 ஐ A யும் B யும் 7 : 8 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டால் A யிற்கும் B யிற்கும் கிடைக்கும் தொகையை தனித்தனியே காண்க.

www.lkedu.lk

5. (i) ஒரு தொகைப் பணத்தை 3 : 4 என்ற விகிதத்தில் பிரதீப்பும் , கண்ணனும் பகிர்ந்து கொண்டபோது பிரதீப்பிற்கு கிடைக்கும் பணம் ரூபா. 600 எனின் அவர்களுக்கிடையே பகிர்ந்த முழுத் தொகையைக் காண்க.

(ii) ஒரு காணியை A யிற்கும் B யிற்கும் இடையில் 4 : 5 என்ற விகிதத்தில் பகிர்ந்த போது A யிற்கு கிடைத்த காணியின் அளவு 12 ஏக்கர் எனில், பகிர்ந்த முழுக் காணியின் அளவைக் காண்க.

(iii) 1 : 4 விகிதத்தில் சீமேந்தும் மணலும் சேர்த்து தயாரிக்கப்பட்ட சாந்து கலவைக்கு 20 மணல் தாச்சிகள் பயன்படுத்தப்பட்டன. தயாரிக்கப்பட்ட கலவையின் முழு அளவைக் காண்க.

6. (i) குறிப்பிட்ட ஒரு தொகைப்பணத்தை ராதாவிற்கும் கமலாவிற்குமிடையே 5: 3 என்ற விகிதத்தில் பகிர்ந்த போது ராதாவிற்கு கமலாவை விட ரூபா. 400 கூடுதலாக கிடைத்தது.

(ii) ஒரு பாடசாலையிலுள்ள ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்குமிடையிலான விகிதம் 5 : 7 ஆகும். அப்பாடசாலையில் உள்ள அப் பாடசாலையில் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் 60 எனின் பாடசாலையில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையைக் காண்க.

(iii) ஒரு தொகைப் பணத்தை கமலும், ரவியும் 7 : 4 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்ட போது கமலுக்கு ரவியை விட ரூ. 300 கூடுதலாக கிடைக்குமாயின் இருவருக்குமிடையே பகிரப்படும் முழுத்தொகையைக் காண்க.

7. (i) கமல் ரூபா 10000 ஐயும் விமல் ரூபா 20000 ஐயும் நிமல் ரூபா 25000 ஐயும் இட்டு வியாபாரத்தை ஆரம்பித்தனர். ஒரு வருட இறுதியில் கிடைத்த இலாபம் ரூபா 44000 எனின் அவர்கள் முதலிட்ட விகிதத்திற்கமைய விகிதமாக தருக.

(ii) முக்கோணமொன்றின் மூன்று கோணங்களும் முறையே 40^0, 60^0, 80^0 எனில் அம் மூன்று கோணங்களுக்கிடையிலான விகிதத்தை எழுதுக.

(iii) கம்பித் துண்டின் நீளங்கள் முறையே 3 m , 9 m , 15 m ஆகும். அவற்றின் நீளங்களுக்கிடையிலான விகிதத்தை காண்க.

8. (i) ஒரு தொகைப் பணத்தை A யிற்கும் B யிற்குமிடையே 2 : 3 என்ற விகிதத்திலும் B யிற்கும் C யிற்குமிடையே 3 : 5 என்ற விகிதத்திலும் பகிர்ந்து கொள்ளப்படும் விகிதத்திலும் பகிர்ந்து கொள்ளும் போது A, B, C ஆகிய மூவருக்குமிடையே பணம் பகிர்ந்து கொள்ளப்படும் விகிதத்தை காண்க.

(ii) ஒரு தொகைப் பணத்தை P இற்கும் Q இற்குமிடையே 2 : 5 என்ற விகிதத்திலும் Q இற்கும் R இற்குமிடையே 1 : 2 என்ற விகிதத்திலும் பகிர்ந்து கொள்ளும் போது P , Q , R ஆகிய மூவருக்குமிடையே பணம் பகிர்ந்து கொள்ளப்படும் விகிதத்தை காண்க.

(iii) ஒரு தொகைப் பணத்தை X இற்கும் Y இற்குமிடையே 3 : 2 என்ற விகிதத்திலும் Y இற்கும் Z இற்குமிடையே 4 : 5 என்ற விகிதத்திலும் பகிர்ந்து கொள்ளும் போது X , Y , Z ஆகிய மூவருக்கிடையே பணம் பகிர்ந்து கொள்ளப்படும் விகிதத்தைக் காண்க.

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை
5. விகிதங்கள் - பகுதி (II)
விடைகளும் அறிவுறுத்தல்களும்

வினா இல	விடை	அறிவுறுத்தல்கள்
1.	(i) 1 : 1000 (ii) 1 : 50000 (iii) 1 : 25000	
2.	(i) 4 (ii) ரூ . 4000 (iii) ரூ. 8000	
3.	(i) $\frac{3}{10}$, $\frac{7}{10}$ (ii) $\frac{1}{4}$, $\frac{3}{4}$ (iii) $\frac{2}{5}$, $\frac{3}{5}$	
4.	(i) ரூ. 600, 1400 (ii) 15 kg, 45 kg (iii) ரூ. 14000 , 16000	
5.	(i) ரூ. 1400 (ii) 27 (iii) 25	
6.	(i) ரூ. 1600 (ii) 360 (iii) ரூ. 1100	
7.	(i) 2 : 4 : 5 (ii) 2 : 3 : 4 (iii) 1 : 3 : 5	
8.	(i) 2 : 3 : 5 (ii) 2 : 5 : 10 (iii) 6 : 4 : 5	

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை

எண்கள்

6. சதவீதம் I, II, III

(i) விடயப் பகுப்பாய்வு

(ii) வினாப்பத்திரம்

(iii) விடைகளும் அறிவுறுத்தல்களும்

www.lkedu.lk

விடயப் பகுப்பாய்வு

6.1 பின்னமொன்றை பகுதி எண் 100 ஆகவுள்ள பின்னமாக எழுதுதல்.

6.2 பின்னமொன்றை சதவீதமாக காட்டுதல்.

6.3 சதவீதத்தை பின்னமாக காட்டுதல்.

6.4 தசம எண்ணொன்றை சதவீதமாக எழுதுதல்.

6.5 விகிதமொன்றை பின்னமாக எழுதிக் காட்டுதல்.

6.6 விகிதமொன்றை சதவீதமாக காட்டுதல்.

6.7 சதவீதம் சம்பந்தமான பிரசினங்களைத் தீர்த்தல்.

6.8 இலாப/நட்ட பிரசினங்களைத் தீர்த்தல்.

6.9 கழிவு , தரகு தொடர்பான பிரசினங்களை தீர்ப்பதற்கு சதவீதத்தைப் பயன்படுத்தல்.

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை
6. சதவீதம் - பகுதி (I)
விடயப் பகுப்பாய்வு

வினா இல	குறிக்கோள் இல	குறிக்கோள்
	6.1	**பின்னமொன்றை, பகுதி எண் 100 ஆகவுள்ள பின்னமாக எழுதுதல்.**
01.	6.1.1	தொகுதி 1 ஆகவும், பகுதி ஓரிலக்க எண்ணாகவும் 100 இன் காரணியாகவும் உள்ள முறைமைப் பின்னமொன்றை, பகுதி 100 ஆகவுள்ள பின்னமாக எழுதுவார்.
02.	6.1.2	தொகுதி 1 ஆகவும், பகுதி ஈரிலக்க எண்ணாகவும் 100 இன் காரணியாகவும் உள்ள முறைமைப் பின்னமொன்றை, பகுதி 100 ஆகவுள்ள பின்னமாக எழுதுவார்.
03.	6.1.3	தொகுதி, பகுதியிலும் பார்க்கச் சிறிதாகவும், பகுதி ஓரிலக்க எண்ணாகவும் 100 இன் காரணியாகவும் உள்ள முறைமைப் பின்னமொன்றை, பகுதி 100 ஆகவுள்ள பின்னமாக எழுதுவார்.
04.	6.1.4	தொகுதியானது, பகுதியிலும் சிறிய ஓரிலக்க எண்ணாகவும், பகுதி 100 மடங்காகவும் உள்ள முறைமைப் பின்னமொன்றை, பகுதி 100 ஆகவுள்ள பின்னமாக எழுதுவார்.
05.	6.1.5	தொகுதியானது, பகுதியிலும் சிறிய ஈரிலக்க எண்ணாகவும், பகுதி 100 மடங்காகவும் உள்ள முறைமைப் பின்னமொன்றை, பகுதி 100 ஆகவுள்ள பின்னமாக எழுதுவார்.
06.	6.1.6	தொகுதியானது, பகுதியிலும் சிறிய ஈரிலக்க எண்ணாகவும், பகுதி 100 மடங்காகவும் உள்ள முறைமைப் பின்னமொன்றை, பகுதி 100 ஆகவுள்ள பின்னமாக எழுதுவார்.
07.	6.1.7	தொகுதியானது, பகுதியிலும் சிறிய ஈரிலக்க எண்ணாகவும், பகுதி 100 மடங்காகவும் உள்ள முறைமைப் பின்னமொன்றை, பகுதி 100 ஆகவுள்ள பின்னமாக எழுதுவார்.
08.	6.1.8	தரப்பட்ட பின்னமொன்றை எளிய வடிவில் எழுதுவார்.
09.	6.1.9	தொகுதி பகுதியிலும் சிறிதாக இருக்க, அவை ஓரிலக்க எண்ணாகவும் இருக்க, அவற்றிற்கு பொதுக் காரணியும் இருக்க , அவற்றைச் சுருக்கிப் பகுதி எண் 100 கொண்ட பின்னமாக எழுதுவார்.
10.	6.1.10	பகுதியிலும், தொகுதியிலும் பொதுக்காரணிகள் உள்ள பின்னத்தைச் சுருக்கி பகுதி எண் 100 கொண்ட பின்னமாக எழுதுவார்.
11.	6.1.11	பகுதியிலும், தொகுதியிலும் பொதுக்காரணி உள்ளதாகவும், அவை ஈரிலக்க எண்ணாகவும் இருக்க அப் பின்னத்தைச் சுருக்கி பகுதி எண் 100 கொண்ட பின்னமாக எழுதுவார்.
	6.2	**பின்னமொன்றைச் சதவீதமாக எழுதுதல்.**
12.	6.2.1	பகுதியெண் 100 ஐ கொண்ட முறைமைப் பின்னமொன்றை சதவீதமாக எழுதிக் காட்டுவார்.
13.	6.2.2	பகுதியெண் 10 ஐ உடைய முறைமைப் பின்னமொன்றை சதவீதமாக எழுதிக் காட்டுவார்.
14.	6.2.3	பகுதியெண் 100 இன் காரணியாகவும் தனி இலக்கமாகவுமுள்ள பின்னமொன்றறை சதவீதமாக எழுதிக் காட்டுவார்.

www.lkedu.lk

15.	6.2.4	தொகுதியெண் ஓரிலக்கமாகவும் பகுதியெண் 100 இன் காரணியாகவும் ஈரிலக்கத்தையும் கொண்ட பின்னத்தை சதவீதமாக எழுதிக் காட்டுவார்.
16.	6.2.5	தொகுதியெண் ஈரிலக்கமாகவும் பகுதியெண் 100 இன் காரணியாகவும் ஈரிலக்கத்தையும் கொண்ட பின்னத்தை சதவீதமாக எழுதிக் காட்டுவார்.
17.	6.2.6	பகுதியெண் ஓரிலக்கத்தையும் தொகுதியெண் 1 ஆகவும், பகுதியெண் 100 இன் காரணியாக அல்லாத பின்னமொன்றை சதவீதமாக காட்டுவார்.
18.	6.2.7	பகுதியெண் ஓரிலக்கத்தைக் கொண்ட 100 இன் காரணி அல்லாத, தொகுதியெண் பகுதியெண்ணை விடச் சிறிய ஆனால் 1 இலும் பெரிய பின்னமொன்றை சதவீதமாக காட்டுவார்.
19.	6.2.8	பகுதியெண் 100 இன் காரணியல்லாத பகுதியெண்ணுக்கும் 100 க்கும் பொதுக்காரணிகள் உள்ள பின்னமொன்றை சதவீதமாக எழுதிக் காட்டுவார்.
20.	6.2.9	பகுதியெண்ணிலும் தொகுதியெண்ணிலும் பொதுக் காரணிகளைக் கொண்ட பின்னமொன்றை சதவீதமாக எழுதிக் காட்டுவார்.
21.	6.2.10	பகுதியும் தொகுதியும் 1 இற்கும் 10 இற்கும் இடைப்பட்ட எண்ணாகவும், பகுதி 100 இன் காரணியாகவும் பகுதி தொகுதியிலும் பார்க்கச் சிறிய தாகவும் உள்ள பின்னத்தை சதவீதமாக எழுதுவார்.
22.	6.2.11	தொகுதி, பகுதியிலும் பார்க்கப் பெரிதாகவும், பகுதி 100 இன் ஈரிலக்கக் காரணியாகவும் உள்ள பின்னத்தைச் சதவீதமாக எழுதுவார்.
23.	6.2.12	பின்னத்தின் பகுதி, 100 இன் ஓரிலக்கக் காரணியாகவுள்ள கலப்பு எண்ணை சதவீதமாக எழுதுவார்.
24.	6.2.13	பின்னத்தின் பகுதி, 100 இன் ஈரிலக்கக் காரணியாகவுள்ள கலப்பு எண்ணை சதவீதமாக எழுதுவார்.
25.	6.2.14	பின்னத்தின் பகுதி, 100 இன் காரணியல்லாத ஓரிலக்க எண்ணாகவுள்ள கலப்பு எண்ணை சதவீதமாக எழுதுவார்.
26.	6.2.15	பின்னத்தின் பகுதி, 100 இன் காரணியல்லாத ஈரிலக்க எண்ணாகவுள்ள கலப்பு எண்ணை சதவீதமாக எழுதுவார்.
	6.3	**சதவீதத்தைப் பின்னமாக எழுதுதல்**
27.	6.3.1	100 இன் காரணியில்லாத எண்ணொன்றைச் சதவீதமாகத் தரப்படுமிடத்து அதனைப் பின்னமாக எழுதுவார்.
28.	6.3.2	100 இன் காரணியான எண்ணொன்றைச் சதவீதமாகத் தரப்படுமிடத்து அதனைப் பின்னமாக எழுதுவார்.
29.	6.3.3	தரப்படும் சதவீதத்திற்குரிய எண் 100 உடன் பொதுக்காரணியைக் கொண்ட தாக இருப்பின் அச்சதவீதத்தைப் பின்னமாக எளிய வடிவில் எழுதுவார்.
30.	6.3.4	தரப்பட்ட சதவீதம் 100 இலும் சிறிய 10 இன் மடங்காகவிருக்க, அச்சதவீதத்தைப் பின்னமாக எளிய வடிவில் எழுதுவார்.
31.	6.3.5	100 இலும் சிறிய சதவீதமொன்று தரப்படுமிடத்து, அது 100 உடன் பொதுக் காரணியைக் கொண்டதாகவிருக்க, அச்சதவீதத்தைப பின்னமாக எளிய வடிவில் எழுதுவார்.
32.	6.3.6	100 இலும் பெரிய எண்ணொன்று சதவீதமாகத் தரப்பட்டு, அதற்கு 100 உடன் பொதுக் காரணியும் உள்ளதாகவிருக்க, அச் சதவீதத்தைக் கலப்பு எண்ணாக எழுதுவார்.
33.	6.3.7	100 இலும் பெரிய எண்ணொன்று சதவீதமாகத் தரப்பட்டு, அதற்கு 100 உடன் பொதுக் காரணியும் உள்ளதாகவிருக்க, அச் சதவீதத்தைக் கலப்பு எண்ணாக எழுதுவார்.

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை
6. சதவீதம் - பகுதி (I)
வினாப்பத்திரம்

♦ பின்வரும் பின்னங்களை பகுதியெண் 100 ஐ உடைய சமவலுப் பின்னங்களாக எழுதுக.

01. (i) $\frac{1}{2}$ (ii) $\frac{1}{4}$ (iii) $\frac{1}{5}$

02. (i) $\frac{1}{10}$ (ii) $\frac{1}{20}$ (iii) $\frac{1}{25}$

03. (i) $\frac{3}{4}$ (ii) $\frac{2}{5}$ (iii) $\frac{3}{5}$

04. (i) $\frac{7}{10}$ (ii) $\frac{3}{20}$ (iii) $\frac{9}{50}$

05. (i) $\frac{11}{20}$ (ii) $\frac{21}{25}$ (iii) $\frac{43}{50}$

06. (i) $\frac{4}{20}$ (ii) $\frac{5}{25}$ (iii) $\frac{5}{50}$

07. (i) $\frac{12}{20}$ (ii) $\frac{15}{25}$ (iii) $\frac{30}{50}$

♦ பின்வரும் பின்னங்களை எளிய வடிவில் தருக.

08. (i) $\frac{2}{8}$ (ii) $\frac{15}{30}$ (iii) $\frac{9}{15}$

♦ பின்வரும் பின்னங்களை பகுதியெண் 100 ஐ உடைய சமவலுப் பின்னங்களாக எழுதுக.

09. (i) $\frac{6}{8}$ (ii) $\frac{3}{6}$ (iii) $\frac{2}{8}$

10. (i) $\frac{3}{15}$ (ii) $\frac{6}{60}$ (iii) $\frac{7}{28}$

11. (i) $\frac{21}{35}$ (ii) $\frac{18}{45}$ (iii) $\frac{27}{75}$

♦ பின்வரும் பின்னங்களை சதவீதமாக எழுதுக.

12. (i) $\frac{21}{100}$ (ii) $\frac{9}{100}$ (iii) $\frac{51}{100}$

13. (i) $\frac{1}{10}$ (ii) $\frac{3}{10}$ (iii) $\frac{7}{10}$

14. (i) $\frac{1}{2}$ (ii) $\frac{3}{4}$ (iii) $\frac{2}{5}$

15. (i) $\frac{3}{10}$ (ii) $\frac{7}{20}$ (iii) $\frac{9}{25}$

16. (i) $\frac{11}{20}$ (ii) $\frac{17}{25}$ (iii) $\frac{31}{50}$

www.lkedu.lk

17. (i) $\frac{1}{3}$ (ii) $\frac{1}{7}$ (iii) $\frac{1}{9}$

18. (i) $\frac{2}{3}$ (ii) $\frac{5}{7}$ (iii) $\frac{7}{9}$

19. (i) $\frac{5}{6}$ (ii) $\frac{7}{12}$ (iii) $\frac{23}{30}$

20. (i) $\frac{10}{12}$ (ii) $\frac{20}{30}$ (iii) $\frac{45}{80}$

21. (i) $\frac{7}{5}$ (ii) $\frac{9}{4}$ (iii) $\frac{7}{2}$

22. (i) $\frac{23}{10}$ (ii) $\frac{27}{20}$ (iii) $\frac{103}{50}$

♦ **பின்வரும் கலப்பு எண்களைச் சதவீதமாக எழுதுக.**

23. (i) $3\frac{1}{2}$ (ii) $1\frac{1}{4}$ (iii) $2\frac{2}{5}$

24. (i) $2\frac{3}{10}$ (ii) $3\frac{7}{20}$ (iii) $2\frac{3}{25}$

25. (i) $1\frac{2}{3}$ (ii) $3\frac{2}{7}$ (iii) $2\frac{4}{9}$

26. (i) $3\frac{5}{12}$ (ii) $2\frac{4}{15}$ (iii) $1\frac{5}{16}$

♦ **பின்வரும் சதவீதங்களைப் பின்னமாக எளிய வடிவில் எழுதுக.**

27. (i) 7 % (ii) 11 % (iii) 37 %

28. (i) 4 % (ii) 5 % (iii) 2 %

29. (i) 48 % (ii) 15 % (iii) 12 %

30. (i) 70 % (ii) 60 % (iii) 80 %

31. (i) 75 % (ii) 96 % (iii) 64 %

♦ **பின்வரும் சதவீதங்களை கலப்பு எண்களாக எழுதுக.**

32. (i) 125 % (ii) 170 % (iii) 250 %

33. (i) 143 % (ii) 207 % (iii) 502 %

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை

6. சதவீதம் - பகுதி (I)

விடைகளும் அறிவுறுத்தல்களும்

	விடை			அறிவுறுத்தல்கள்
01.	(i) $\frac{50}{100}$	(ii) $\frac{25}{100}$	(iii) $\frac{20}{100}$	சமவலுப் பின்னத்தை உபயோகித்தல்
02.	(i) $\frac{10}{100}$	(ii) $\frac{5}{100}$	(iii) $\frac{4}{100}$	
03.	(i) $\frac{75}{100}$	(ii) $\frac{40}{100}$	(iii) $\frac{60}{100}$	
04.	(i) $\frac{70}{100}$	(ii) $\frac{15}{100}$	(iii) $\frac{18}{100}$	
05.	(i) $\frac{55}{100}$	(ii) $\frac{84}{100}$	(iii) $\frac{86}{100}$	
06.	(i) $\frac{20}{100}$	(ii) $\frac{20}{100}$	(iii) $\frac{10}{100}$	
07.	(i) $\frac{60}{100}$	(ii) $\frac{60}{100}$	(iii) $\frac{60}{50}$	
08.	(i) $\frac{1}{4}$	(ii) $\frac{1}{2}$	(iii) $\frac{3}{5}$	
09.	(i) $\frac{75}{100}$	(ii) $\frac{50}{100}$	(iii) $\frac{25}{100}$	
10.	(i) $\frac{20}{100}$	(ii) $\frac{10}{100}$	(iii) $\frac{25}{100}$	
11.	(i) $\frac{60}{100}$	(ii) $\frac{40}{100}$	(iii) $\frac{36}{100}$	
12.	(i) 21 %	(ii) 9 %	(iii) 51 %	சமவலுப் பின்னத்தை உபயோகிக்கலாம் அல்லது 100% ஆல் பெருக்கலாம்.
13.	(i) 10 %	(ii) 30 %	(iii) 70 %	
14.	(i) 50 %	(ii) 75 %	(iii) 40 %	
15.	(i) 30 %	(ii) 35 %	(iii) 36 %	
16.	(i) 55 %	(ii) 68 %	(iii) 62 %	
17.	(i) $33\frac{1}{3}$ %	(ii) $14\frac{2}{7}$ %	(iii) $11\frac{1}{9}$ %	

www.lkedu.lk

18.	(i) $66\frac{2}{3}\%$	(ii)	$71\frac{3}{7}\%$	(iii)	$77\frac{7}{9}\%$	
19.	(i) $83\frac{1}{3}\%$	(ii)	$58\frac{1}{3}\%$	(iii)	$76\frac{2}{3}\%$	
20.	(i) $83\frac{1}{3}\%$	(ii)	$66\frac{2}{3}\%$	(iii)	$56\frac{1}{4}\%$	
21.	(i) 140 %	(ii)	225 %	(iii)	350 %	
22.	(i) 230 %	(ii)	135 %	(iii)	206 %	
23.	(i) 350 %	(ii)	125 %	(iii)	240 %	
24.	(i) 230 %	(ii)	335 %	(iii)	212 %	
25.	(i) $166\frac{2}{3}\%$	(ii)	$328\frac{4}{7}\%$	(iii)	$244\frac{4}{9}\%$	
26.	(i) $341\frac{1}{2}\%$	(ii)	$226\frac{2}{3}\%$	(iii)	$131\frac{1}{4}\%$	
27.	(i) $\frac{7}{100}$	(ii)	$\frac{11}{100}$	(iii)	$\frac{37}{100}$	
28.	(i) $\frac{1}{25}$	(ii)	$\frac{1}{20}$	(iii)	$\frac{1}{50}$	விடைகள் எளிய வடிவில் இருக்க வேண்டும்.
29.	(i) $\frac{2}{25}$	(ii)	$\frac{3}{20}$	(iii)	$\frac{3}{25}$	
30.	(i) $\frac{7}{10}$	(ii)	$\frac{3}{5}$	(iii)	$\frac{4}{5}$	
31.	(i) $\frac{3}{4}$	(ii)	$\frac{9}{20}$	(iii)	$\frac{24}{25}$	
32.	(i) $1\frac{1}{4}$	(ii)	$1\frac{7}{10}$	(iii)	$2\frac{1}{2}$	
33.	(i) $1\frac{43}{100}$	(ii)	$2\frac{7}{100}$	(iii)	$5\frac{1}{50}$	

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை
6. சதவீதம் - பகுதி (II)
விடயப் பகுப்பாய்வு

வினா இல	குறிக்கோள் இல	குறிக்கோள்
	6.4	**தசம எண்ணென்றை சதவீதமாக எழுதுதல்.**
01.	6.4.1	ஒன்றிலும் சிறிய இரு தசமதானங்கள் கொண்ட தசம எண்ணொன்றைச் சதவீதமாக எழுதுவார்.
02.	6.4.2	ஒன்றிலும் குறைந்த ஒரு தசமதானத்தையுடைய எண்ணொன்றை சதவீதமாக எழுதிக் காட்டுவார்.
03.	6.4.3	ஒன்றிலும் குறைந்த ஒரு தசமதானத்தையுடைய எண்ணொன்றை சதவீதமாக எழுதிக் காட்டுவார்.
04.	6.4.4	ஒன்றிலும் கூடிய இரு தசமதானங்களையுடைய எண்ணொன்றை சதவீதமாக எழுதிக் காட்டுவார்.
	6.5	**விகிதமொன்றை பின்னமாக எழுதிக் காட்டுதல்.**
05.	6.5.1	1 இற்கும் 10 இற்கும் இடையிலான எளிய விகிதங்களை பின்னமாக எழுதிக் காட்டுவார்.
06.	6.5.2	இரண்டாவது கணியம் இரு இலக்கங்களைக் கொண்ட 100 இன் காரணியாகவுள்ள எண்ணொன்றின் எளிய விகிதத்தை பின்னமாக எழுதிக் காட்டுவார்.
07.	6.5.3	இரண்டாவது கணியம் இரு இலக்கங்களைக் கொண்ட 100 இன் காரணியல்லாத எண்ணொன்றின் எளிய விகிதத்தை பின்னமாக எழுதிக் காட்டுவார்.
08.	6.5.4	முதற் கணியம் இரண்டாவது கணியத்தை விட பெரிதாகவுள்ள எளிய விகிதமொன்றை பின்னமாக எழுதிக் காட்டுவார்.
09.	6.5.5	இரண்டாவது கணியம் 10 ஆகவுள்ள எளிய விகிதத்தை பின்னமாக எழுதிக் காட்டுவார்.
10.	6.5.6	இரண்டாவது கணியம் 100 ஆகவுள்ள எளிய விகிதத்தை பின்னமாக எழுதுவார்.
	6.6	**விகிதமொன்றை சதவீதமாக காட்டுதல்**
11.	6.6.1	இரண்டாவது கணயம் 100 ஆகவுள்ள விகிதமொன்றை எழுதிக் காட்டுவார்.
12.	6.6.2	இரண்டாவது கணியம் 10 ஆகவுள்ள விகிதமொன்றை சதவீதமாக எழுதிக் காட்டுவார்.
13.	6.6.3	இரண்டாவது கணியம் 100 இன் காரணியாகவும் தனி இலக்கத்தை கொண்டதுமான கணியங்களை கொண்ட விகிதங்களை சதவீதமாக எழுதிக் காட்டுவார்.
14.	6.6.4	இரண்டாவது கணியம் இரு இலக்கங்களைக் கொண்டதும் 100 இன் காரணிகளாகவுள்ளதுமான விகிதங்களை சதவீதமாக எழுதிக் காட்டுவார்.
15.	6.6.5	இரண்டாவது கணியம் முதற் கணியத்தைவிட குறைந்த பெறுமானத்தை கொண்ட விகிதமொன்றை சதவீதமாக எழுதிக் காட்டுவார்.
16.	6.6.6	இரண்டாவது கணியம் 100 இன் காரணி அல்லாத எண்ணொன்றாக வுள்ள விகிதங்களை சதவீதமாக எழுதிக் காட்டுவார்

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை
6. சதவீதம் - பகுதி (II)
வினாப்பத்திரம்

♦ **பின்வரும் தசம எண்களை சதவீதமாக எழுதுக.**

1. (i) 0.37 (ii) 0.47 (iii) 0.57
2. (i) 0.3 (ii) 0.5 (iii) 0.9
3. (i) 1.5 (ii) 3.2 (iii) 5.8
4. (i) 3.25 (ii) 10.32 (iii) 5.34

♦ **பின்வரும் விகிதங்களை பின்னங்களாக எழுதுக.**

5. (i) 1 : 2 (ii) 2 : 5 (iii) 3 : 4
6. (i) 3 : 10 (ii) 7 : 20 (iii) 8 : 25
7. (i) 8 : 11 (ii) 6 : 23 (iii) 5 : 21
8. (i) 5 : 2 (ii) 7 : 4 (iii) 27 : 20
9. (i) 3 : 10 (ii) 7 : 10 (iii) 9 : 10
10. (i) 9 : 100 (ii) 11 : 100 (iii) 53 : 100

♦ **பின்வரும் விகிதங்களை சதவீதமாக எழுதுக.**

11. (i) 9 : 100 (ii) 11 :100 (iii) 37 : 100
12. (i) 3 : 10 (ii) 7 :10 (iii) 9 : 10
13. (i) 1 : 2 (ii) 3 : 5 (iii) 3 : 4
14. (i) 7 : 20 (ii) 11 : 25 (iii) 29 : 50
15. (i) 5 : 2 (ii) 9 : 4 (iii) 21 : 20
16. (i) 1 : 3 (ii) 2 : 7 (iii) 8 : 9

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை
6. சதவீதம் - பகுதி (II)
விடைகளும் அறிவுறுத்தல்களும்

வினா இல	விடை	அறிவுறுத்தல்கள்
1.	(i) 37% (ii) 47% (iii) 57%	
2.	(i) 30% (ii) 50% (iii) 90%	
3.	(i) 150% (ii) 320% (iii) 580%	
4.	(i) 325% (ii) 1032% (iii) 534%	
5.	(i) $\frac{1}{2}$ (ii) $\frac{2}{5}$ (iii) $\frac{3}{4}$	
6.	(i) $\frac{3}{10}$ (ii) $\frac{7}{20}$ (iii) $\frac{8}{25}$	
7.	(i) $\frac{8}{11}$ (ii) $\frac{6}{23}$ (iii) $\frac{5}{21}$	
8.	(i) $\frac{5}{2}$ (ii) $\frac{7}{4}$ (iii) $\frac{27}{20}$	
9.	(i) $\frac{3}{10}$ (ii) $\frac{7}{10}$ (iii) $\frac{9}{10}$	
10.	(i) $\frac{9}{100}$ (ii) $\frac{11}{100}$ (iii) $\frac{53}{100}$	
11.	(i) 9 % (ii) 11 % (iii) 37 %	
12.	(i) 30 % (ii) 70 % (iii) 90 %	
13.	(i) 50 % (ii) 60 % (iii) 75 %	
14.	(i) 35% (ii) 44% (iii) 58%	
15.	(i) 250% (ii) 225% (iii) 105%	
16.	(i) $33\frac{1}{3}\%$ (ii) $14\frac{2}{7}\%$ (iii) $88\frac{8}{9}\%$	

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை
6. சதவீதம் - பகுதி (III)
விடயப் பகுப்பாய்வு

வினா இல	குறிக்கோள் இல	குறிக்கோள்
	6.7	**சதவீதம் தொடர்பான பிரசினங்களைத் தீர்ப்பார்**
01.	6.7.1	முழு அளவும் பங்கொன்றின் அளவும் கொடுக்கப்படும் போது பங்கொன்றின் அளவை முழுவதின் சதவீதமாக எழுதுவார்.
02.	6.7.2	முழு அளவும் அதன் பங்கொன்றின் அளவும் தரப்படும் போது மிகுதி பங்கை முழுவதின் சதவீதமாக காட்டுவார்.
	6.8	**இலாப / நட்ட பிரசினங்களை தீர்த்தல்**
03.	6.8.1	கொள்விலையும் விற்றவிலையும் கொடுக்கப்படும் போது இலாபத்தைக் கணிப்பார்.
04.	6.8.2	கொள்விலையும் விற்றவிலையும் கொடுக்கப்படும் போது நட்டத்தை கணிப்பார்.
05.	6.8.3	கொள்விலையும் விற்றவிலையும் தரப்படும் போது இலாப சதவீதத்தைக் கணிப்பார்.
06.	6.8.4	கொள்விலையும் விற்றவிலையும் தரப்படும் போது நட்ட சதவீதத்தைக் கணிப்பார்.
07.	6.8.5	கொள்விலையும் இலாப சதவீதமும் தரப்படும் போது இலாபத்தைக் கணிப்பார்.
08.	6.8.6	கொள்விலையும் நட்ட சதவீதமும் தரப்படும் போது நட்டத்தைக் கணிப்பார்.
09.	6.8.7	உற்பத்திச் செலவும் தீர்மானிக்கப்பட்ட இலாபசதவீதமும் தரப்படும் போது பெறும் இலாபத்தைக் கணிப்பார்.
10.	6.8.8	கொள்விலையும் இலாப சதவீதமும் தரப்படும் போது விற்ற விலையைக் காண்பார்.
11.	6.8.9	இலாப சதவீதமும் விற்றவிலையும் தரப்படும் போது கொள்விலை யைக் கணிப்பார்.
12.	6.8.10	நட்ட சதவீதமும் விற்றவிலையும் தரப்படும் போது கொள்விலையைக் கணிப்பார்.
	6.9	**கழிவு, தரகுப்பணம் தொடர்பான பிரசினங்களை தீர்ப்பதற்காக சதவீதத்தைப் பயன்படுத்துவார்.**
13.	6.9.1	குறித்த விலையும், விற்றவிலையும் தரப்படும் போது கழிவைக் கணிப்பார்.
14.	6.9.2	குறித்த விலையும் , விற்றவிலையும் தரப்படும் போது பெற்றுக் கொள்ளும் கழிவுச் சதவீதத்தைக் கணிப்பார்.
15.	6.9.3	குறித்த விலையும் , கழிவுச்சதவீதமும் தரப்படும் போது விற்றவிலை யைக் கணிப்பார்.
16.	6.9.4	விற்றவிலையும் கழிவுச் சதவீதமும் தரப்படும் போது குறித்த விலையைக் கணிப்பார்.
17.	6.9.5	ஒரு பொருளை விற்கத் தீர்மானித்த விலையும் தரகு சதவீதமும் தரப்பட்டால் தரகுத் தொகையைக் கணிப்பார்.
18.	6.9.6	ஒரு பொருளை விற்கத் தீர்மானித்த விலையும் தரகுப் பணமும் தரப்பட்டால் தரகுச் சதவீதத்தை கணிப்பார்.

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை
6. சதவீதம் - பகுதி (III)
வினாப்பத்திரம்

01. (i) என்னிடம் இருந்த பணம் ரூ. 100 இல் ரூ. 80 ஐச் செலவு செய்தால் செலவு செய்த சதவீதத்தைக் காண்க.

(ii) 40 kg மரக்கறித் தொகையில் 30 kg ஐ விற்பனை செய்தால் விற்பனை செய்யப்பட்ட மரக்கறி மொத்ததொகையின் என்ன சதவீதம்.

(iii) 50 மாணவர்களைக் கொண்ட வகுப்பில் 30 பேர் பெண்பிள்ளைகள் எனின் பெண்பிள்ளைகளின் தொகையை வகுப்பிலுள்ள மொத்த மாணவர்களின் சதவீதமாகத் தருக.

02. (i) என்னிடம் ரூ. 500 இருந்தது அதில் ரூ. 200 ஐ செலவு செய்தால், மிகுதித் தொகை என்னிடம் இருந்த தொகையின் என்ன சதவீதமாகும்.

(ii) 20 நாட்கள் பாடசாலை நடைபெற்ற ஒரு மாதத்தில் அமல் பாடசாலைக்கு சமூகமளித்த நாட்கள் 4 எனின் சமூகமளித்த நாட்கள் மொத்த பாடசாலை நாட்களின் என்ன சதவீதமாகும்.

(iii) 50kg மரக்கறித்தொகையில் 40kg அளவை விற்பனை செய்திருந்தால் எஞ்சியிருப்பது மொத்த மரக்கறித் தொகையின் என்ன சதவீதம் ஆகும்.

அட்டவணையைப் பூரணப்படுத்துக.

		கொள்விலை ரூபா	விற்றவிலை ரூபா	இலாபம் ரூபா	நட்டம் ரூபா
03.	(i)	50	60	.....	
	(ii)	200	280	.....	
	(iii)	500	550	.....	
04.	(i)	40	35		.....
	(ii)	900	850		.....
	(iii)	1000	900		.....

www.lkedu.lk

பின்வரும் அட்டவணையிலுள்ள இடைவெளிகளை பூரணப்படுத்துக.

	கொள்விலை ரூபா	விற்றவிலை ரூபா	இலாபம் ரூபா	நட்டம் ரூபா	இலாப சதவீதம் ரூபா	நட்டசதவீதம் ரூபா
05.	100	120	.....		$\frac{.....}{100} \times 100\% = ... \%$	
	80	100	.....		$\frac{.....}{100} \times 100\% = ... \%$	
	200	240	.....		..... x ..... = ... %	
06.	100	80		.....		$\frac{.....}{100} \times 100\% = ... \%$
	40	30		.....		.....
	250	200		.....		.....

07. (i) ரூபா 20 இற்கு வாங்கிய புத்தகமொன்றை 10% இலாபம் வைத்து விற்பதனால் கிடைக்கும் இலாபத்தைக் காண்க.

(ii) ரூபா 120 இற்கு வாங்கிய பொருளொன்றை 20% இலாபம் வைத்து விற்பதனால் கிடைக்கும் இலாபத்தைக் காண்க.

(iii) ரூபா 600 இற்கு வாங்கிய பொருளொன்றை 15% இலாபம் வைத்து விற்பதனால் கிடைக்கும் இலாபத்தைக் காண்க.

08. (i) ரூபா 50 இற்கு வாங்கிய பொருளொன்றை 10% நட்டத்தில் விற்க நேர்ந்தால் நட்டத்தைக் காண்க.

(ii) ரூபா 150 இற்கு வாங்கிய பொருளொன்றை 20% நட்டத்துடன் விற்க நேர்ந்தால் ஏற்றபட்ட நட்டத்தைக் காண்க.

(iii) ரூபா 400 இற்கு வாங்கிய மரக்கறியினை 5% நட்டத்துடன் விற்க நேர்ந்தது எனின் ஏற்றபட்ட நட்டத்தைக் காண்க.

09. (i) ரூபா 400 செலவு செய்து உற்பத்தி செய்யப்பட்ட பொருளொன்றை 20% இலாபம் பெறும் வகையில் விற்பனை செய்யும் போது பெறப்படும் இலாபத்தைக் காண்க.

(ii) உற்பத்திச் செலவு ரூபா 40000 ஐ கொண்ட அலுமாரியை 20% இலாபத்துடன் விற்பனை செய்வதால் உற்பத்தியாளர் பெறும் இலாபத்தைக் காண்க.

(iii) கறிமிளகாய் பயிரிடும் ஒரு விவசாயி பயிர்ச்செய்கைக்காக செலவு செய்த தொகையில் 20% இலாபத்தை எதிர்பார்க்கின்றார். முழுச் செலவு ரூபா. 5000 ஆயின் அவர் பெறும் இலாபத்தைக் காண்க.

www.lkedu.lk

10. (i) 20% இலாபம் வைத்து விற்கும் நோக்கில் ரூபா. 200 இற்கு வாங்கிய பொருளொன்றை விற்கும் விலையைக் காண்க.

(ii) 10% இலாபம் வைத்து விற்கும் நோக்கில் ரூபா 200 இற்கு வாங்கிய பொருளொன்றை விற்கும் விலையைக் காண்க.

(iii) வியாபாரியொருவர் ரூபா 1200 வாங்கிய பொருளொன்றை 20% இலாபத்தில் விற்பனை செய்கிறார். அப்பொருளின் விற்பனை விலையைக் காண்க.

11. (i) 20% இலாபத்துடன் ரூபா 480 இற்கு விற்பனை செய்யும் பொருளொன்றின் கொள்விலையைக் காண்க.

(ii) 25% இலாபத்துடன் ரூபா 1500 இற்கு விற்பனை செய்யும் பொருளொன்றின் கொள்விலையைக் காண்க.

(iii) 12% இலாபத்துடன் ரூபா 1232 இற்கு விற்பனை செய்யப்பட்ட பொருளொன்றின் கொள்விலையைக் காண்க.

12. (i) 10% நட்டத்துடன் ரூபா. 360 இற்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு பொருளின் கொள்விலையைக் காண்க.

(ii) 5% நட்டத்துடன் ரூபா. 760 இற்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு பொருளின் கொள்விலையைக் காண்க.

(iii) 5% நட்டத்துடன் ரூபா. 980 இற்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு பொருளின் கொள்விலையைக் காண்க.

13. **பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

	குறித்தவிலை ரூபா	விற்ற விலை ரூபா	வழங்கப்பட்ட கழிவு
(i)	50	40	50 - ..... = ...
(ii)	720	700	..... - ..... = ...
(iii)	1200	1175	..... - ..... = ...

14. (i) ரூபா 400 விலை குறிக்கப்பட்ட ஒரு பொருள் ரூபா 360 இற்கு விற்பனை செய்யப்பட்டதாயின் அவ்வியாபார நிறுவனம் வழங்கிய கழிவுச் சதவீதம் யாது?

(ii) ரூபா 1200 விலை குறிக்கப்பட்ட ஒரு பொருள் ரூபா 1140 இற்கு விற்பனை செய்யப்பட்டதாயின் அவ்வியாபார நிறுவனம் வழங்கிய கழிவுச் சதவீதம் யாது?

(iii) ரூபா 2500 விலை குறிக்கப்பட்ட ஒரு பொருள் ரூபா 2250 இற்கு விற்பனை செய்யப்பட்டதாயின் அவ்வியாபார நிறுவனம் வழங்கிய கழிவுச் சதவீதம் யாது?

www.lkedu.lk

15. (i) ஒரு வியாபார நிலையத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்ட ஒரு பொருளின் விலை ரூபா 500 எனக் குறிக்கப்பட்டுள்ளது. அதனை விற்பனை செய்யும் நோக்கில் 10% கழிவு வழங்கப்பட்டதாயின் விற்ற விலையைக் காண்க.

(ii) ஒரு வியாபார நிலையத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்ட ஒரு பொருளின் விலை ரூபா 1200 எனக் குறிக்கப்பட்டுள்ளது. அதனை விற்பனை செய்யும் நோக்கில் 5% கழிவு வழங்கப்பட்டதாயின் விற்ற விலையைக் காண்க.

(iii) ஒரு வியாபார நிலையத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்ட ஒரு பொருளின் விலை ரூபா 7200 எனக் குறிக்கப்பட்டுள்ளது. அதனை விற்பனை செய்யும் நோக்கில் 20% கழிவு வழங்கப்பட்டதாயின் விற்ற விலையைக் காண்க.

16. (i) புத்தகக் கடையில் 10% கழிவு வழங்கப்பட்டதால் ரவியினால் ஒரு புத்தகத்தை ரூபா 540 இற்கு வாங்க முடிந்தது எனின் அப்புத்தகத்தின் குறித்த விலை யாது?

(ii) புத்தகக் கடையில் 5%கழிவு வழங்கப்பட்டதால் ரவியினால் ஒரு புத்தகத்தை ரூபா 2280 இற்கு வாங்க முடிந்தது எனின் அப்புத்தகத்தின் குறித்த விலை யாது?

(iii) புத்தகக் கடையில் 8%கழிவு வழங்கப்பட்டதால் ரவியினால் ஒரு புத்தகத்தை ரூபா 1840 இற்கு வாங்க முடிந்தது எனின் அப்புத்தகத்தின் குறித்த விலை யாது?

17. (i) காணியொன்றினை விற்பதற்கு ஒழுங்கு செய்தமைக்காக தரகருக்கு 3% தரகுப்பணம் கிடைத்தது. அக்காணி ரூபா 120000 இற்கு விற்பனை செய்யப்பட் டிருந்தால் தரகருக்கு கிடைத்த பணம் எவ்வளவு?

(ii) காணியொன்றினை விற்பதற்கு ஒழுங்கு செய்தமைக்காக தரகருக்கு 5% தரகுப்பணம் கிடைத்தது. அக்காணி ரூபா 275000 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தால் தரகருக்கு கிடைத்த பணம் எவ்வளவு?

(iii) காணியொன்றினை விற்பதற்கு ஒழுங்கு செய்தமைக்காக தரகருக்கு 5% தரகுப்பணம் கிடைத்தது. அக்காணி ரூபா 25000 இற்கு விற்பனை செய்யப்பட் டிருந்தால் தரகருக்கு கிடைத்த பணம் எவ்வளவு?

18. (i) பண்டமொன்றினை ரூபா 25000 இற்கு விற்பனை செய்த போது தரகுப் பணமாக ரூபா 1250 கிடைத்தது எனின் வழங்கப்பட்ட தரகு சதவீதம் எவ்வளவு?

(ii) வாகனமொன்றினை ரூபா 300000 இற்கு விற்பனை செய்த போது தரகுப் பணமாக ரூபா 1250 கிடைத்தது எனின் வழங்கப்பட்ட தரகு சதவீதம் எவ்வளவு?

(iii) பண்டமொன்றினை ரூபா 12500 இற்கு விற்பனை செய்த போது தரகுப் பணமாக ரூபா 1875 கிடைத்தது எனின் வழங்கப்பட்ட தரகு சதவீதம் எவ்வளவு?

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை
6. சதவீதம் - பகுதி (III)
விடைகளும் அறிவுறுத்தல்களும்

	விடை			அறிவுறுத்தல்கள்
1.	(i) 80%	(ii) 75%	(iii) 60%	
2.	(i) 60%	(ii) 20%	(iii) 20%	
3.	(i) 10	(ii) 80	(iii) 50	
4.	(i) 5	(ii) 50	(iii) 100	
5.	(i) 20%	(ii) 25%	(iii) 20%	அட்டவணையிலேயே இடைவெளி நிரப்புவது பொருத்தமானது.
6.	(i) 20%	(ii) 25%	(iii) 20%	
7.	(i) ரூபா 2	(ii) ரூபா 24	(iii) ரூபா 90	
8.	(i) ரூபா 5	(ii) ரூபா 30	(iii) ரூபா 20	
9.	(i) ரூபா 80	(ii) ரூபா 8000	(iii) ரூபா 1000	
10.	(i) ரூபா 240	(ii) ரூபா 220	(iii) ரூபா 1440	
11.	(i) ரூபா 400	(ii) ரூபா 1200	(iii) ரூபா 1100	
12.	(i) ரூபா 400	(ii) ரூபா 800	(iii) ரூபா 1000	
13.	(i) ரூபா 10	(ii) ரூபா 20	(iii) ரூபா 25	அட்டவணையிலேயே இடைவெளி நிரப்புவது பொருத்தமானது.
14.	(i) 10%	(ii) 5%	(iii) 10%	
15.	(i) ரூபா 450	(ii) ரூபா 1140	(iii) ரூபா 5760	
16.	(i) ரூபா 600	(ii) ரூபா 2400	(iii) ரூபா 2000	
17.	(i) ரூபா 3600	(ii) ரூபா 13750	(iii) ரூபா 1250	
18.	(i) 5%	(ii) 8%	(iii) 15%	

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை

எண்கள்

7. வர்க்கமூலம்

(i) விடயப் பகுப்பாய்வு

(ii) வினாப்பத்திரம்

(iii) விடைகளும் அறிவுறுத்தல்களும்

www.lkedu.lk

விடயப் பகுப்பாய்வு

7.1 வர்க்கமூலம் தொடர்பான பிரசினங்களை இனங்கண்டு தீர்ப்பார்.

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை
7. வர்க்கமூலம்
விடயப் பகுப்பாய்வு

வினா இல	குறிக்கோள் இல	குறிக்கோள்
	7.1	**வர்க்கமூலம் தொடர்பான பிரசினங்களை இனங்கண்டு தீர்ப்பார்.**
01.	7.1.1	எண்ணொன்றை அதே எண்ணொன்றினால் கிடைக்கும் பெருக்கம் அவ்வெண்ணின் வர்க்கமூலம் எனப்படும்.
02.	7.1.2	எண்ணொன்றின் வர்க்கம் என கூற்றை அடுக்குக்குறி 2 கொண்ட வலுவாக எழுதிக் காட்டுவார்.
03.	7.1.3	எண்ணொன்றை அதே எண்ணொன்றினால் பெருக்குவதால் கிடைக்கும் பெருக்கத்தை அடுக்குறி 2 கொண்ட வலுவாக எழுதிக்காட்டுவார்.
04.	7.1.4	முழுவெண் அடியையும் அடுக்குக்குறி 2 ஐயும் கொண்ட வலுவின் பெறுமானத்தை எழுதுவார்.
05.	7.1.5	எளிய பின்ன அடியையும், அடுக்குக்குறி 2 யும் கொண்ட வலுவின் பெறுமானத்தை எழுதுவார்.
06.	7.1.6	தசம எண் அடியையும் அடுக்குக்குறி 2 ஐயும் கொண்ட வலுவின் பெறுமானத்தை எழுதுவார்.
07.	7.1.7	முழு வர்க்கப் பின்னமொன்றைப் பெறுவதற்காகப் பெருக்கிய முழுவெண்ணை அவ் வர்க்க எண்ணின் வர்க்க மூலம் எனக் குறிப்பிடுவார்.
08.	7.1.8	வர்க்க எண்ணொன்றைப் பெறுவதற்காகப் பெருக்கிய பின்னமொன்றை அவ் வர்க்க எண்ணின் வர்க்க மூலம் எனக் குறிப்பிடுவார்.
09.	7.1.9	வர்க்க எண்ணொன்றைப் பெறுவதற்காகப் பெருக்கிய தசம எண்ணை, அவ்வர்க்க எண்ணின் வர்க்கமூலம் எனக் குறிப்பிடுவார்.
10.	7.1.10	வர்க்க எண்ணொன்றின் வர்க்கத்தை குறிக்கோள் மூலம் எழுதுவார்.
11.	7.1.11	$\sqrt{}$ இட்டு எழுதப்பட்ட முழு வர்க்க எண்ணொன்றின் வர்க்க இலக்கத்தை எழுதுவார்.
12.	7.1.12	$\sqrt{}$ இட்டு எழுதப்பட்ட பின்ன வர்க்க எண்ணொன்றின் வர்க்க இலக்கத்தை எழுதுவார்.
13.	7.1.13	$\sqrt{}$ இட்டு எழுதப்பட்ட தசம வர்க்க எண்ணொன்றின் வர்க்க இலக்கத்தை எழுதுவார்.
14.	7.1.14	முதன்மைக் காரணிகளின் வலுக்களின் பெருக்கத்தை தரப்பட்டுள்ள முழு வர்க்க எண்ணொன்றின் வர்க்க மூலத்தை ஒரே காரணிச் சோடியாக வேறாக்கிப் பெறுவார்
15.	7.1.15	முதன்மைக் காரணிகளின் வலுக்களின் பெருக்கமாகத் தரப்பட்டுள்ள முழு வர்க்க எண்ணொன்றின் வர்க்க மூலத்தை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து சரியாக தெரிவு செய்வார்.
16.	7.1.16	முதன்மைக் காரணிகளின் வலுக்களின் பெருக்கமாகத் தரப்பட்டுள்ள எண்களிலிருந்து முழு வர்க்க எண்களைச் சரியாகத் தெரிவு செய்வார்.
17.	7.1.17	தரப்பட்ட எண்ணொன்றின் வர்க்கமூலத்தை முதன்மைக் காரணிகளின் வலுக்களின் பெருக்கம் மூலம் பெறுவார்.

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை
7. வர்க்கமூலம்
வினாப்பத்திரம்

வினா இல	வினா
01.	கீழே தரப்பட்டுள்ள பெருக்கங்களை (i) , (ii) ஆகியவற்றில் தரப்பட்டுள்ளவாறு விரித்து எழுதுக. (i) 2 x 2 = 2 இனது வர்க்கம் (ii) 3 x 3 = 3 இனது வர்க்கம் (iii) 5 x 5 = ... (iv) $\frac{1}{2}$ x $\frac{1}{2}$ = ... (v) 0.3 x 0.3 = ...
02.	கீழே சொற்களில் விபரிக்கப்பட்டுள்ள வர்க்கங்களை (i) , (ii) ஆகியவற்றில் காட்டியவாறு வலுவாக எழுதுக. (i) 2 இன் வர்க்கம் = 2^2 (ii) $\frac{1}{3}$ இன் வர்க்கம் = $\left(\frac{1}{3}\right)^2$ (iii) 10 இன் வர்க்கம் = ... (iv) $\frac{1}{2}$ இன் வர்க்கம் = ... (v) 0.5 இன் வர்க்கம் = ...
03.	தரப்படும் பெருக்கங்களை (i) , (ii) ஆகியவற்றில் காட்டியவாறு வலுவாக எழுதுக. (i) 2 x 2 = 2^2 (ii) $\frac{1}{4}+\frac{1}{4}=\left(\frac{1}{4}\right)^2$ (iii) 7 x 7 = ... (iv) $\frac{2}{5}$ x $\frac{2}{5}$ = ... (v) 0.3 x 0.3 = ...

www.lkedu.lk

04. கீழே தரப்பட்டுள்ள வர்க்கங்களின் பெறுமானங்களை (i) , (ii) ஆகியவற்றில் காட்டியவாறு எழுதுக.

(i) $5^2 = 25$

(ii) $10^2 = 100$

(iii) 6^2 = ...

(iv) 3^2 = ...

(v) 12^2 = ...

05. கீழே தரப்பட்டுள்ள வர்க்கங்களின் பெறுமானங்களை (i) , (ii) ஆகியவற்றில் காட்டியவாறு எழுதுக.

(i) $(\frac{1}{2})^2 = \frac{1}{4}$

(ii) $(\frac{3}{4})^2 = \frac{9}{16}$

(iii) $(\frac{1}{5})^2$ = ...

(iv) $(\frac{2}{3})^2$ = ...

(v) $(\frac{5}{8})^2$ = ...

06. கீழே தரப்பட்டுள்ள வர்க்கங்களின் பெறுமானங்களை (i) , (ii) ஆகியவற்றில் காட்டியவாறு எழுதுக.

(i) $(0.2)^2 = 0.04$

(ii) $(0.5)^2 = 0.25$

(iii) $(0.3)^2$ = ...

(iv) $(0.4)^2$ = ...

(v) $(1.1)^2$ = ...

07. **(i) , (ii) ஆகியவற்றில் காட்டியுள்ளவாறு இடைவெளி நிரப்புக.**

(i) 5 இனது வர்க்கம் = 25 ஆகும். அப்போது 25 இனது வர்க்கமூலம் = 5

(ii) 3 இனது வர்க்கம் = 9 ஆகும். அப்போது 9 இனது வர்க்கமூலம் = 3

(iii) 7 இனது வர்க்கம் = 49 ஆகும். அப்போது 49 இனது வர்க்கமூலம் = ...

(iv) 10 இனது வர்க்கம் = 100 ஆகும். அப்போது 100 இனது வர்க்கமூலம் = ...

(v) 12 இனது வர்க்கம் = 144 ஆகும். அப்போது 144 இனது வர்க்கமூலம் = ...

www.lkedu.lk

08. **(i) , (ii) ஆகியவற்றில் காட்டியுள்ளவாறு இடைவெளி நிரப்புக.**

(i) $\frac{1}{2}$ இனது வர்க்கம் = $\frac{1}{4}$ ஆகும். அப்போது $\frac{1}{4}$ இனது வர்க்கமூலம் = $\frac{1}{2}$

(ii) $\frac{2}{5}$ இனது வர்க்கம் = $\frac{4}{25}$ ஆகும். அப்போது $\frac{4}{25}$ இனது வர்க்கமூலம் = $\frac{2}{5}$

(iii) $\frac{1}{3}$ இனது வர்க்கம் = $\frac{1}{9}$ ஆகும். அப்போது $\frac{1}{9}$ இனது வர்க்கமூலம் = ...

(iv) $\frac{3}{4}$ இனது வர்க்கம் = $\frac{9}{16}$ ஆகும். அப்போது $\frac{9}{16}$ இனது வர்க்கமூலம = ...

(v) $\frac{3}{10}$ இனது வர்க்கம் = $\frac{9}{100}$ ஆகும். அப்போது $\frac{9}{100}$ இனது வர்க்கமூலம்= .....

09. **(i) , (ii) ஆகியவற்றில் காட்டியுள்ளவாறு இடைவெளி நிரப்புக.**

(i) 0.2 இனது வர்க்கம் = 0.04 ஆகும். அப்போது 0.04 இனது வர்க்கமூலம் = 0.2
(ii) 0.5 இனது வர்க்கம் = 0.25 ஆகும். அப்போது 0.25 இனது வர்க்கமூலம் = 0.5
(iii) 0.1 இனது வர்க்கம் = 0.01 ஆகும். அப்போது 0.01 இனது வர்க்கமூலம் =.....
(iv) 0.7 இனது வர்க்கம் = 0.49 ஆகும். அப்போது 0.49 இனது வர்க்கமூலம் =.....
(v) 1.2 இனது வர்க்கம் = 1.44 ஆகும். அப்போது 1.44 இனது வர்க்கமூலம் =.....

10. **பின்வரும் ஒவ்வொரு எண்ணினதும் வர்க்கமூலத்தை (i) இல் காட்டியுள்ள வாறு குறியீடுகளால் எழுதுக.**

(i) 4 இனது வர்க்கமூலம் = $\sqrt{4}$
(ii) 9 இனது வர்க்கமூலம் = ...
(iii) 16 இனது வர்க்கமூலம் = ...
(iv) $\frac{4}{25}$ இனது வர்க்கமூலம் = ...

11. **இடைவெளி நிரப்புக.**

(i) $\sqrt{25}$ = 5
(ii) $\sqrt{9}$ = ...
(iii) $\sqrt{36}$ = ...
(iv) $\sqrt{100}$ = ...

12. **இடைவெளி நிரப்புக.**

(i) $\sqrt{\frac{4}{9}}$ = $\frac{2}{3}$

(ii) $\sqrt{\frac{9}{25}}$ = ...

(iii) $\sqrt{\frac{25}{100}}$ = ...

(iv) $\sqrt{\frac{1}{4}}$ = ...

www.lkedu.lk

13. **இடைவெளி நிரப்புக.**

(i) $\sqrt{0.01}$ = 0.1

(ii) $\sqrt{0.25}$ = ...

(iii) $\sqrt{0.36}$ = ...

(iv) $\sqrt{1.21}$ = ...

14. கீழே கட்டமிட்டுத் தரப்பட்டுள்ள வர்க்கமூலம் முறைப்படி இடைவெளிகளை நிரப்புக.

16 = 2 x 2 x 2 x 2 (முறைமைக் காரணிகளின் பெருக்கத்தை எழுதுக)

= (2 x 2) x (2 x 2) (ஒரே காரணிச் சோடிகளை வேறாக்கல்)

$\therefore \sqrt{16}$ = 2 x 2 (வர்க்கமூலத்தைப் பெறல்)

= 4

(i) 64 = 2 x 2 x 2 x 2 x 2 x 2

= (2 x 2) x (2 x 2) x (2 x 2)

$\sqrt{64}$ = ... x ..... x .....

= .....

(ii) 36 = 2 x 2 x 3 x 3

= (2 x 2) x (3 x 3)

$\sqrt{36}$ = ... x .....

= .....

(iii) 400 = 2 x 2 x 2 x 2 x 5 x 5

= (2 x 2) x (2 x 2) x (5 x 5)

$\sqrt{400}$ = ... x ..... x .....

= .....

www.lkedu.lk

15. முதன்மைக் காரணிகளின் வலுக்களின் பெருக்கமாக எழுதப்பட்டுள்ள பின்வரும் ஒவ்வொரு பின்னத்தினதும் வர்க்க மூலத்தை (a), (b), (c) ஆகியவற்றில் தெரிவு செய்து சரியான விடையின் கீழ் கோடிடுக.

(i) $2^2 \times 5^2$ இனது வர்க்கமூலம்

(a) 20 (b) 50 (c) 10

(ii) $3^2 \times 2^4$ இனது வர்க்கமூலம்

(a) 6 (b) 12 (c) 18

(iii) $5^2 \times 3^4$ இனது வர்க்கமூலம்

(a) 75 (b) 45 (c) 15

16. முதன்மைக் காரணிகளின் வலுக்களின் பெருக்கமாக எழுதப்பட்டுள்ள பின்வரும் ஒவ்வொரு எண்களுள் முழு வர்க்க எண்ணை (a), (b), (c) ஆகியவற்றிலிருந்து தெரிவு செய்து சரியான விடையின் கீழ் கோடிடுக.
முழு வர்க்க எண்களாவன,

(i) (a) 2^2 (b) 2^3 (c) 5^3
(ii) (a) $2^2 \times 3$ (b) $3^2 \times 2^4$ (c) $2^2 \times 3^3$
(iii) (a) $5^3 \times 3^3$ (b) $2^3 \times 3^2$ (c) $2^2 \times 5^2$

17. **பின்வரும் அட்டவணையை நிரப்புக.**

	முழு வர்க்க எண்	முதன்மைக் காரணிகளின் பெருக்கமாக எழுதுதல்	வர்க்கமூலம்
(a)	324	2 x 2 x 3 x 3 x 3 x 3	2 x 3 x 3 = 18
(b)	225	.....	..... = ...
(c)	625	.....	..... = ...
(d)	576	.....	..... = ...
(e)	900	.....	..... = ...

www.lkedu.lk

ஆய்ந்தறி சோதனை
7. வர்க்கமூலம்
விடைகளும் அறிவுறுத்தல்களும்

வினா இல	விடை	அறிவுறுத்தல்கள்
01	(iii) 5 இனது வர்க்கம் (iv) $\frac{1}{2}$ இனது வர்க்கம் (v) 0.3 இனது வர்க்கம்	சொற்களில் குறிப்பிடுவது எதிர்பார்க்கப்படுகின்றது.
02.	(iii) 10^2 (iv) $(\frac{1}{2})^2$ (v) $(0.5)^2$	$(\frac{1}{2})^2$ என்றவாறு சரியாக
03.	(iii) 7^2 (iv) $(\frac{1}{25})^2$ (v) $(0.3)^2$	எழுதுதல்
04.	(iii) 36 (iv) 9 (v) 144	
05.	(iii) $\frac{2}{5}$ (iv) $\frac{4}{9}$ (v) $\frac{25}{64}$	
06.	(iii) 0.09 (iv) 0.16 (v) 1.21	பெருக்கத்தின் இரண்டு தசம தானங்கள் 1.1 x 1.1 = 1.21
07.	(iii) 7 (iv) 10 (v) 12	
08.	(iii) $\frac{1}{3}$ (iv) $\frac{3}{4}$ (v) $\frac{3}{10}$	
09.	(iii) 0.1 (iv) 0.7 (v) 1.2	
10.	(iii) $\sqrt{9}$ (iv) $\sqrt{16}$ (v) $\sqrt{\frac{4}{25}}$	
11.	(ii) 3 (iii) 6 (iv) 10	

www.lkedu.lk

12. (ii) $\frac{3}{5}$ (iii) $\frac{5}{10}$ (iv) $\frac{1}{2}$

13. (ii) 0.5 (iii) 0.6 (iv) 1.1

14. (i) $\sqrt{64}$ = 2 x 2 x 2

= 8

(ii) $\sqrt{36}$ = 2 x 3

= 6

(iii) $\sqrt{400}$ = 2 x 2 x 5

= 20

15. (i) c (ii) b (iii) b

16. (i) a (ii) b (iii) c

17.

	முழு வர்க்க எண்	முதன்மைக் காரணிகளின் பெருக்கமாக	வர்க்கமூலம்
b)	225	3 x 3 x 5 x 5	3 x 5 = 15
c)	625	5 x 5 x 5 x 5	5 x 5 = 25
a)	576	2 x 2 x 2 x 2 x 2 x 2 x 3 x 3	2 x 2 x 2 x 3 = 24
e)	900	2 x 2 x 3 x 3 x5 x 5	2 x 3 x 5 = 30

www.lkedu.lk